மாதர்மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XII.	Madras: December, 1910.	No-12.
புத்தகம் - கஉ.	சென்னப்பட்டணம்: டிஸம்பர்மீ 1910.	இலக்கம்-12.

நமது பத்திரிகை.

நமது எண்ணம்.

நமது பத்திரிகைக்கு இம்மாதத்துடன் 12-வது ஆண்டுமுடிகிறது. அடுத்த ஜனவரி மீ 13-வது வருஷம் ஆரம்பமாகிறது. நாம் இப்பத்திரிகையை முதலில் நமது நாட்டுப் பெண்மணிகள் கல்வியிற்றேர்ந்து நல்ல தாய்மார்களாகவும் உத்தம ஸ்திரீரத்னங்களாகவு மிருந்து வரவேண்டுமென்ற முக்கிய எண்ணத்துடன் ஆரம்பித்து நமது கையொப்பக்காரருடைய பெரும் உதவியாலும் ஈசனுடைய கிருபாகடாட்சத்தாலும் இது வரையிலும் நடத்தி வருகிறோம்.

சென்னையில் பெண்கல்வி.

சென்னையில் பெண்கல்வி அதிக விருத்தியை யடையாவிடினும் முன்னைவிட இப்பொழுது தொகை யதிகரித்து வருகிறதென்றே சொல்லலாம். இப்பொழுது 178,867 பெண்கள் படித்து வருகிறார்கள். பாடசாலையில் படிக்கும் பெண்மணிகள் 100-க்கு 6-ம், பிள்ளைகள் 100-க்கு 32-மாக யிருக்கின்றார்கள்.

வைத்தியம், பி. ஏ. முதலிய பரிட்சையில் சிலர் தேறியிருக்கிறார்கள். இவைகளில் சிலர் படித்தும் வருகிறார்கள். சிலர் நமது பத்திரிகைக்குச் சிறந்த வியாசங்களை எழுதி வருகிறார்கள். நேஷனல் இந்தியன் சபையாரும் மிஷினைச் சேர்ந்தவர்களும் தங்களாலியன்றளவு மாதர்களுக்கு வீட்டிலேயே போதித்து வருகிறார்கள். இவ்விதப்படிப்பு மிகவும் முக்கியமானது. ஏனெனில் பாடசாலையில் வயதானபின் படிக்கமுடிகிறதில்லை. இவர்கள் வீட்டிலே இவ்விதம் படித்து வந்தால் அறிவுடையவர்களாவார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் பெண்களுக்குப் பாடசாலை யிருக்கவேண்டுமென்கிற ஆசை நமக்கிருக்கிறது. இவ்விருப்பம் நிறைவேறும் என்று நம்புகிறோம். ஏனெனில் கிராமாந்திரத்தில்கூட பெண்கள் படிக்க வேண்டுமென்று பெண்களின் பெற்றோர் எண்ணி வருகிறார்கள். அவர்கள் உதவியால் பாடசாலைகள் ஸ்தாபிக்கப்படலாமல்லவா? வீட்டிலிருக்கும் பெண்மணிகள் இன்னும் படித்து வர நம்மவர்கள் தக்க ஏற்பாடு செய்ய முன்வரவேண்டும்.

இலங்கையில் பெண்கல்வி.

இலங்கையில் (சிலோனில்) அநேக பெண்கள் கல்விகற்றுவருகிறார்கள். இவர்கள் தமிழ் பாஷையை நன்றாகப் பயின்று வருவதைக் கேட்க மிகவும் சந்தோஷப்படுகிறோம். இங்கு அநேக பெண்கள் பாடசாலைகளிருக்கின்றன. பெண்களுக்காக ஒரு காலேஜ் ஸ்தாபிக்க சிலர் யோசித்துக் கொண்டிருப்பது நிறைவேறுமாறு ஈசன் அருள் புரிவாராக. ஸ்ரீமதி ராஜம்மாள் என்ற பெண்மணி இத்தீவைச் சேர்ந்தவர். இப்பெண்மணி நமது பத்திரிகைக்கு அடிக்கடி வியாசங்களை எழுதிவருகிறார்கள். இவ்விதமே இன்னும் சில பெண்மணிகள் எழுதி வருவார்களென்று நம்புகிறோம். நமது பத்திரிகையும் அத்தீவில் இவ்வருஷத்தைவிட அடுத்த வருஷத்தில் இன்னும் அதிகமாகப் பரவி வருமென்றும் நம்புகிறோம்.

பம்பாயில் பெண்கல்வி.

பம்பாயில் 9170-ப்ரைமரி பாடசாலைகள் அதிகரித்திருக்கின்றன. இந்த இராஜதானியில் 100க்கு 7 பெண்களும், 100க்கு 34 பிள்ளைகளும் படித்து வருகிறார்கள். மாதர்கள் சபை விருத்தியடைந்து வருகிறது. சிலர் ஏழைகளுக்கு "சேவசாதன்" மூலமாக உதவி புரிந்துவருகிறார்கள். பெண்களுக்காக "மாசிகமனோரஞ்சினி" என்ற மாதாந்தரப்பத்திரிகை செவ்வனே நடத்தப்பட்டுவருகிறது. இதற்கு 8000-கையொப்ப நேயர்களிருப்பதைக் கேட்க எவர் தான் சந்தோஷப்படமாட்டார்கள் ?

நமது பத்திரிகைக்கோ 1000-கையொப்பம் கூடயில்லையே ! சென்னை சுதேசமித்திரனுக்கு மாத்திரம் 3500 கையொப்பமிருக்கிறது. இது பெரிதல்ல. இச்சிறந்த தினப்பத்திரிகைக்கு 10,000 கையொப்பக்காரர்களிருந்தால் நமது இராஜதானிக்கு அழகு. அவ்விடத்தைப் போல் நமது தேசத்தில் சுயபாஷையை கௌரவப்படுத்துகிறதில்லை. பெண்கள் படித்து விருத்தியடையவேண்டுமென்று மனப் பூர்ணமாய் நினைப்பதுமில்லை. அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்வதுமில்லை. இவ்விதமிருந்தால் நாம் எப்பொழுது விருத்தியடைவோம்? ஆகையால் பெண்கல்வி விருத்தியடையுமாறு ஒவ்வொருவரும் முயன்று வரவேண்டும். பெண்களுக்காகப் பிரசுரிக்கப்பட்டு வரும் பத்திரிகையை ஆதரித்து அதை விருத்திக்குக் கொண்டுவர முயலவும்வேண்டும்.

மத்திய மாகாணங்களில் பெண்கல்வி.

மத்திய மாகாணங்களில் பெண்கல்வி விருத்தியடைந்து வருகிறது. பஞ்சாபில் முன் 23,588 பெண்கள் படித்துவந்தார்கள். இப்பொழுது 24,916 பேர் படித்துவருகிறார்கள். வங்காளத்தில் பெண் கல்வியின் விருத்தி திருப்தி கரமாயிருக்கிறது. மகமதியர்களும் தங்கள் பெண்கள் கற்று தேறவேண்டுமென்று விரும்புகிறார்கள். இவ்விடத்தில் 139,245 ப்ரைமரி பாடசாலைகளில் படித்துவந்தார்கள். உயர்தரப் படிப்புக்காக 163-பெண்கள் படித்துவந்தார்கள். 31 பெண்கள் பெதூன் காலேஜியில் படித்துவந்தார்களாம்.

1909௵ ஜனவரி௴ பட்டணாவில் பெண்களுக்காக போதனாமுறை காலேஜ் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு ஒரு மாது தலைவியாகயிருக்கிறாள். இங்கு கற்கும் பெண்மணிகள் வெகு ஆவலுடனும், தன் முயற்சியுடனும் கற்று வருகிறதைக் கேட்கச் சந்தோஷப்படுகிறோம்.

இவ்வருஷம் நாம் செய்த வேலை.

இவ்வருஷத்தில் நம்மாலியன்றளவு மாதர்களுக்கும், பெண்களுக்கும் மிக உபயோகமான விஷயங்களைப் பிரசுரித்துவந்தோம். அதாவது பாரத மஹிளா மண்டலம், தூமக்கேதுக்கள், பொறுமை, எறும்பு, தஞ்சாவூர்நந்தி, தர்மம், வெப்பம், கோபம், குழந்தைகளும் தாய்மார்களும், கடலும் அதன் உபயோகமும், பருவங்கள், பெற்றோரிடத்தில் அன்பு, ஞானியருலகு, நீதிகளடங்கிய விஷயங்கள், இந்து குடும்பத்தின் ஸ்திதி, காலங்கழித்தல், பொருடனைப்போற்றிவாழ், இந்தி பாரசிக ஸ்திரீகளுக்கு கல்வி, சுயபாஷை அவசியம் முதலியவைகளே. சுகாதார விஷயமாக சிற்சில விஷயங்களும் சாஸ்திர பாடம் என்ற சிறந்த விஷயமும், பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. மேன்மை தங்கிய மத்தியகாலத்து ஸ்திரீகளின் சரித்திரங்களும், நீதிகளடங்கிய பல கதைகளும் வெளிவந்தன. சர்வஜித், சதாரம் முதலியவைகளும் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. மேற்கூறிய விஷயங்கள் நமது மாதர்களுக்கும், பெண்மணிகளுக்கும் கல்வி அபிவிருத்தியுண்டாக முக்கிய சாதனங்களாயிருக்கும். சில சித்திரப்படங்கள் தான் பிரசுரிக்கப்பட்டன. இவைகளுக்காக உதவியை எதிர்பார்த்தோம். உதவியில்லாமையால் அதிகப்படங்களைப் பிரசுரிக்கமுடியவில்லை. ஆயினும் அடுத்த வருஷம் சிறந்த சிற்சில சித்திரப்படங்களைப்பிரசுரிக்க தக்க எற்பாடு செய்துவருகிறோம்.

இனி செய்யப்போகும் வேலை.

இன்னும் அடுத்த வருஷம் அருமையான விஷயங்களை எழுதிவர நிச்சயித்திருக்கிறோம். மத்திய வகுப்பைச்சேர்ந்த ஸ்திரீகளும் ஏழைகளும் தொழில்செய்து சுலபமாக ஜீவிக்க சில கைத்தொழில்களின் முழு விவரமும் எழுதப்படும். சுகாதாரம், சரித்திர சம்பந்தமான பெரியோர்களின் சரித்திரம், ஸ்திரீகளின் சரித்திரம், சாஸ்திரப்பாடம், பூகோள விஷயம், முதலியவைகள் பிரசுரிக்கப்படும். அபூர்வமான சிறு கதைகளும், சம்ஸ்கிருத நாடகங்களும் பிரசுரிக்கப்படும். இவைகளெல்லாம் மாதர்களுக்கும், பெண்மணிகளுக்கும் மிக்க அறிவைப்புகட்டக் கூடியனவாயிருக்கும்.

நமது வேண்டுகோள்.

ஆகையால் நமது சந்தாதார்கள் இது வரையிலும் உதவிசெய்து வந்ததைவிட இன்னும் அதிகமாக நமது மனோரஞ்சினி உன்னத பதவியையடையுமாறு தங்களாலியன்ற உதவி செய்யமுன் வருவார்களென்றே உறுதியாக நம்புகிறோம்.

வந்தனம்.

நமக்கு இதுவரையில் பற்பல வழிகளில் உதவி புரிந்துவருகிற கையொப்ப நேயர்களுக்கும் நிருபநேயர்களுக்கும், பத்திராசிரியர்களுக்கும், சென்னைக் கவர்ன்மெண்டாருக்கும் நமது மனப்பூர்ண வந்தனத்தை யளிக்கின்றோம். அவர்களுக்கு ஈசன் பூர்ண ஆயுளையும், தேகபலத்தையும், செல்வத்தையும் அளிப்பாராக. நமக்கும் நமது 13-வது வயதுள்ள குழந்தையாகிய மாதர் மனோரஞ்சினியை செவ்வனே காலம் தவறாமல் பற்பல நூதனவிஷயங்களுடன் நடத்திவர ஈசன் தேகப்பலத்தை அளிப்பாராக. சுபம்.

☞ பத்திராதிபர்.

மிதக்கும் வஸ்துக்கள்

முன்தொடர்ச்சி.

மற்றொரு கார்க் துண்டு எடுத்துக்கொள்வோம். அது 1-அங்குல நீளமும் ஒரு அங்குல அகலமும், 4 அங்குல உயரமும் இருப்பதாக வைத்துக்கொள்வோம் அதன் அளவு (Volume) 4-கன அங்குலம் அல்லவா? அது எவ்வளவு கனமிருக்குமோ அவ்வளவு கனம் ஒரு கன அங்குலம் ஜலம் இருக்குமல்லவா? இதை ஜலத்தின் உள் போட்டால் ஒரு அங்குல ஆழம் தான் உள்ளே முழுகும். ஒரு அங்குல ஆழம் முழுகின உடனேயே ஜலம் மேலே தூக்கும் பலமும் கார்க் துண்டின் கனமும் சரியாய்ப் போய்விடுகின்றன. ஆகையால் கார்க்துண்டு, ஒரு அங்குலம் ஜலத்திற்கு அடியிலும் 3-அங்குலம் ஜலத்திற்கு மேலும், மிதக்கும். இன்னும் சற்று கனமான மரத்துண்டை எடுத்துக்கொண்டால் அது இன்னும் கொஞ்சம்கீழேபோகும். தேக்கு மரமாயிருந்தால் அதிகபாகம்கீழேயும் கொஞ்சபாகம் மேலுமாக இருக்கும். சில சேகேறின மரங்கள் ஜலத்திலேயே முழுகிவிடுகின்றன. ஆகையால் ஒவ்வொரு மிதக்கும் வஸ்துவின் கனமும் அவ்வஸ்து அடைத்துக்கொள்ளும் இடத்தில் உள்ள ஜலத்தின் கனமும் சரியாய் இருக்கும்.

இதுவே போல் தான் மற்ற திரவபதார்த்தங்களிலும்; எண்ணெயைப் பற்றி யோசிப்போம். எண்ணெய் ஜலத்தைவிட இலேசான வஸ்து அல்லவா? ஜலத்தில் போட்ட கார்க் துண்டையே எண்ணெயிலும் போட்டுப் பார்ப்போம். கார்க் ஜலத்தில் எவ்வளவு மூழ்கிற்றோ அதைவிட அதிக தூரம் எண்ணெயில் செல்லுகின்றது. போனபிரிவில் சொன்ன விஷயத்தை இங்கே யோஜித்துப் பாருங்கள். ஜலத்தில் மிதக்கும் ஒவ்வொரு வஸ்துவின் கனமும் அது அடைத்துக்கொள்ளும் இடத்தில் உள்ள ஜலத்தின் கனமும் சரியாய் இருக்குமென்று சொன்னோமல்லவா? 1-அங்குலம் நீளம், 1 அங்குலம் அகலம், 4 அங்குலம் உயரம், உள்ள கார்க்கின் கனமும், 1 அங்குல நீளம், 1 அங்குல அகலம், 1 அங்குலம் உயரமுள்ள ஜலத்தின் கனமும் ஒன்றாய் இருக்கின்றது. சரி; இப்போது மேற்சொன்ன ஜலத்தின் கனமேயுள்ள எண்ணெய் வேண்டுமானால் 1 கன அங்குலம் எடுத்துக்கொண்டால் போதுமோ? போதாதல்லவா? ஏன்? ஜலத்தைவிட எண்ணெய் இலேசானது; ஆம் அதுஉண்மையே; 1 கன அங்குலம் ஜலத்தின்நிறையும் $1\frac{1}{4}$-கன அங்குலம் எண்ணெயின் நிறையும் சரியாய் இருக்கும். மேல் நாம் எடுத்துக்கொண்ட கார்க் துண்டின் கனத்துக்கு சரியான கனமுள்ள எண்ணெயின் இடத்தை அடைத்துக்கொள்ள வேண்டுமானால் கார்க் $1\frac{1}{4}$-கன அங்குலம் எண்ணெயுள் மூழ்க வேண்டுமல்லவா? அது பற்றித்தான் எண்ணெயில் கார்க் துண்டு அதிகமாய் முழுகிப் போகின்றது.

ஜலத்தைவிட பொருள் நெருக்கம் (Density) அதிகமாயுள்ள ஒரு திரவபதார்த்தத்தை எடுத்துக்கொள்வோம். சாதாரண ஜலத்தைவிட சமுத்திர ஜலம் தடிப்பானதுதானே. ஒரு பாத்திரத்தில் சமுத்திர ஜலமாவது இல்லாவிடில் உப்பைப்போட்டுக் கரைத்த ஜலமாவது எடுத்துக்கொள்ளுங்கள்.

அதில் ஒரு கோழி முட்டையைப்போட்டால் முட்டைமிதக்கும். சுத்த ஜலத்திலோ முட்டைமுழுகிவிடும். சுத்த ஜலத்தைவிட முட்டைசற்றுகனமானது. உப்பு ஜலத்தைவிட சற்று இலேசானது. ஆகையால் உப்பு ஜலத்தில் கொஞ்சம் மேலேயும் மற்ற பாகமெல்லாம் ஜலத்தின் கீழேயும் இருக்கும். ஏனெனில் முட்டையின் கனம், அது எவ்வளவு இடத்தை அடைத்துக்கொள்ளுகின்றதோ, அந்த இடத்தில் உள்ள உப்பு ஜலத்தின் கனத்திற்கு, சரியாய் இருக்கிறது. உப்பு ஜலம் முட்டையை மேலே தாங்கும் பலமும், பூமி முட்டையைக் கீழே இழுக்கும் பலமும், சரியாய் இருக்கின்றன. அதைக்கீழே அமிழ்த்தினல் முன்னிலும் அதிக இடத்தை அடைத்துக்கொள்வது பற்றி மேலே தாங்கும் பலம், கனத்தைவிட அதிகமாய்ப் போய்விடுகிறது; ஆகையால் மேலே தள்ளுகின்றது. முட்டை மிதக்கும்போது கொஞ்சம் கொஞ்சமாய் அதில் சுத்த ஜலத்தையாவது மழை ஜலத்தையாவது சேர்த்துக்கொண்டே வந்தால் முட்டை சிறிது சிறிதாய் உள்ளேபோக ஆரம்பிக்கும். ஒரு சமயத்தில் அதன் கனமும் ஜலத்தின் கனமும் ஒன்ருய் இருக்கும். அப்பொழுது முட்டையை எங்கேவைக்கின்ருேமோ அங்கேயே நிற்கும்; அதாவது நீந்தும்; இருந்த இடம் விட்டுக்கீழாவது மேலாவது போகாமல் அதே உயரத்திலேயே அலைந்து கொண்டிருக்கும். இன்னும் கொஞ்சம் சுத்த ஜலம் ஊற்றினல் ஜலம் இலேசாய்க்கொண்டே வருவது பற்றி முட்டை முழுக ஆரம்பிக்கும். இது செலவில்லாமல் சுளுவாய்ச் செய்யக்கூடிய பரிக்ஷை; ஆகையால் எல்லாரும்செய்து பார்க்கலாம்.

இதுவே போன்று வெள்ளி, இரும்பு, பித்தளை, தாமிரம், ஈயம், இவை ரசத்தில் (பாதரசம்—Mercury) மிதப்பன. ரசம் ஜலத்தை $13\frac{1}{2}$ மடங்கு பொருள் நெருக்கம் உடையது; வெள்ளிக்கோ $10\frac{1}{2}$ மடங்குதான் பொருள் நெருக்கம்; ஈயத்துக்கு 11 மடங்கு; தாமிரம் 9; இரும்பு 7; ஆகையால் ஒரே நீளம், அகலம், உயரம் உள்ள இரும்பு, தாமிரம் முதலிய துண்டுகளை ரசத்தில் மிதக்கவிட்டால் ஈயம் கொஞ்சம்தான் மேலே தெரியும்; மற்ற பாகமெல்லாம் ரசத்தின் கீழே மறைந்து நிற்கும். வெள்ளி, ஈயத்தைவிட அதிகமாய் மேலே தெரியும்; கார்க் துண்டைப்போட்டால் மிகக் கொஞ்சம் தான் கீழேயும் மற்ற முழுவதும் மேலேயும் மிதக்கும்.

ஆகையால் (1) ஒரு வஸ்து தன்னளவே (Volume) யுள்ள ஜலபதார்த்தத்தைவிட கனமாய் இருப்பதாஞல் மூழ்கிவிடும்; தன்னளவேயுள்ள ஜலபதார்த்தத்தைவிட கனக் குறைவாய் இருப்பின் அதில் மிதக்கும்; இரண்டும் ஒரே கனமாய் இருப்பின் அதில் மிதக்கவும் மிதக்காது, முழுகவும் முழுகாது. எந்த இடத்தில் வேண்டுமாஞலும் நிற்கும். (2) மேலும் மிதக்கும் வஸ்துவானது எவ்வளவு இடத்தை அடைத்துக் கொள்ளுகிறதோ அவ்விடத்தில் ஜலபதார்த்தத்தின் கனமும் வஸ்துவின் கனமும் சரியாயிருக்கும். இந்த இரண்டு உண்மைகளும் நாம் மறக்கக்கூடாது.

உம்மிடத்தில் ஒரு கண்ணுடி டம்ளர் இருந்தால் அதில் கொஞ்சம் ஜலமும், எண்ணெயும், கெரோஸின் எண்ணெயும், ரஸமும் ஊற்றிப் பாருங்கள். ஒவ்வொன்றும் தம்முடைய பொருள் நெருக்கத்திற்குத் தக்கபடி வரிசையாய் ஒன்றன் கீழ் ஒன்ருய் நிற்கும். முதலில் கெரோஸின், அதன் கீழ்

தேங்காய் எண்ணெய், அதன் கீழ் ஜலம், கடையில் ரஸம் நிற்கும். அதாவது ரஸத்தின் மேல் ஜலமும், ஜலத்தின் மேல் எண்ணெயும், அதன் மேல் கெரோஸின் எண்ணெயும் மிதக்கும்.

சாராயம், பால், தேன், தேன்பாகு இவை ஜலத்துடன் கலக்கும் வஸ்துக்கள் ஆனதுபற்றி ஜலத்துடன் சேர்த்த உடனே சற்றுநேரம் மிதப்பினும் சீக்கிரத்தில் கலந்து ஒரே வஸ்துவாய் விடுகின்றன. இவ்வஸ்துக்கள் ஜலத்தோடு கலந்து இருக்கின்றதா இல்லையா என்று பார்ப்பதற்கு ஒரு நேர்த்தியான கருவி இருக்கின்றது. அதைப்பற்றி அடுத்த தடவை பேசுவோம்.

☞ ஆர். கே. சுவாமி, பி-ஏ., எல்-டி.

சர்வஜித்

33-வது அத்தியாயம்.

மேற்சொல்லிய விசாரணை நடந்த இரண்டாம் நாள் சாயந்திரம் சுமார் நாலு மணி நேரத்தில் குண்டகிலனும் கார்த்தவீரனும் தங்கள் கோட்டையில் ஒரு அறையில் பலவிஷயங்களைக்குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். இவர்கள் ஸர்வஜித்தால் படுகாயப்படுத்தப்பட்டது முதற்கொண்டு வாரங்கள் இரண்டாயின. அக்காயங்களின் வலியால் இன்னும் வருந்திக்கொண்டிருந்தார்கள். அதிக இரத்த நஷ்டத்தாலும், அவர்களுக்குக் காயத்தாலுண்டான சுர நோயாலும் முகங்கள் மெத்த வெளுத்திருந்தன. இவர்கள் வெளியே அசையமுடியாமல் மிக்க நொந்திருந்தார்கள்; ஆகையால் காலத்தைப் போக்குவது இவர்களுக்கு மிகவும் கடினமாயிருந்தது.

தேகசுகத்தோடு இருக்கையிலுங்கூட இவர்கள் சாந்தகுண மென்பதையே அறியாதவர்கள் இப்பொழுதோ சண்டையில் தோல்வியடைந்து, படுகாயப்படுத்தப்பட்டு சுகஹீனர்களாயிருந்தார்கள்: வெளியே யகல முடியாதபடி செய்யப்பட்ட இவர்கள் கூட்டிலடைபட்ட துஷ்ட மிருகங்களைப் போல் இடைவிடாது உறுமிக்கொண்டிருந்தார்களென்பதைக் கேட்பானேன்? இவர்களுக்கு மிக்க ஆப்தர்களான இரண்டொருவரைத் தவிரவும், இவர்களுக்குச் சிகிச்சை செய்துவந்த இரணவைத்தியனைத் தவிரவுமான மற்றெவரும் இப்பயங்கரமான சகோதரர்களுடையசமுகத்தையணுக அஞ்சினார்கள். இவ்வச்சத்தால் தான் வீரனும்தான் காட்டுஸ்திரீ மூலமாக அனுபவித்த விபத்துக்களையும் அவள் கைதியைத் தப்புவிக்கத் தேடின எத்தனங்களைக் குறித்தும், தன் எஜமானர்களிடத்தில் இதுவரையிற் றெரிவிக்கவில்லை.

இது நிற்க, ஸர்வஜித்தின் விசாரணையையும், அவ்விசாரணையில் நடந்த சகல விஷயங்களையும், அவ்விசாரணையின் முடிவையுங்கேட்டு இருவரும் ஆநந்தித்தார்கள்.

விசாரணை முழுதும் அன்னிய ரெவரும் வராதபடி கதவுகள் சாத்தப்பட்டு நடந்திருக்க, மலைத்தலைவர்களுக்கு இரகசியமாய் நடந்த வரலாறுகளெல்லாம் எட்டக் காரணமென்ன? என்று சிலர் கேட்கக் கூடும்.

இச்சந்தேகத்தை நாம் நீக்கவேண்டுவ தவசியம்.

மலையதிபதிகள் தங்களாட்களில் மெத்த புத்திகூர்மை யுள்ளவனை இரத்தினமென்பவனை நியாயஸ்தலத்தில் நடந்த யாவற்றையுமறிந்து வரும்படி அனுப்பினார்கள். இவன் சாக்ஷிகளாயிருந்த காட்டுக் காவலர்களோடு அதிக சிநேகமுள்ளவன். சாக்ஷிகளெல்லாரும் விசாரணையின் துவக்கம் முதல் முடிவுவரையி லிருந்தவர்கள். இதையறிந்த இரத்தினம் அக்காட்டுக் காவலர்களிலொருவனுக்கு அபரிமிதமான கள்ளைக் கொடுத்து, குடி வெறியிலிருந்த அவனிடமிருந்து நியாயஸ்தலத்தில் நடந்த சங்கதிகளனைத்தையும் கிரகித்து தனதெஜமானர்களுக்குத் தெரியப்படுத்தினான்.

தங்களது வேவுகாரன் மூலமாய் யாவற்றையுமறிந்த சகோதரர்கள் பின் வருமாறு பேசிக்கொண்டிருந்தார்கள்:—"எனது அருமையான தமையனே, நமது காரியத்தி னனுகூலத்தைக் கருதியே எல்லா சம்பவங்களும் நடந்துவருகின்றன போலிருக்கின்றன. சீமாட்டி லீலாவதியை விவாகஞ்செய்துகொள்ளமுந்தியுள்ளதைக் காட்டிலும் இப்போது தங்களுக்குஇருபதுமடங்கு அவா இருக்கிறதாகச் சொல்லுகிறீர்கள். அப்படியிருக்கும் பக்ஷத்தில் நாம் மனந் தளரவேண்டாம். நாளைய நடுநிசியில் ஸர்வஜித் எமலோகஞ் சென்றுவிடுவான். ஒரு பெரிய இடையூறு ஒழிந்துவிடும். பிரபு அநங்கனோ நமது கையில் சிக்கிக்கொண்டான்—" என்று கார்த்தவீரன் சொல்ல, குண்டசீலன் "அதெப்படி? நாம் அவனை சிறை பிடிக்க வில்லையே" என்றான்.

"எனது கருத்தை தாங்கள் இன்னும் விளக்கிக்கொள்ளவில்லை. இப்பொழுது இரத்தினம் நமக்குத் தெரிவித்ததிலிருந்து பிரபு அநங்கன் பொய் சொன்னதாகத் தெரிகிறது. தவிரவும், அநங்கன் பொய்சொன்னானென்று நிரூபமாகும் பக்ஷத்தில் அவன் கடுந்தண்டனைக்குள்ளாவானென்று நியாயாதிபதி சொன்னதாகவும் அறிகிறோம். பிரபு அநங்கன் சொன்னது பொய் யென்பதை நாம் அறிவோம். ஆகையால்—"

"ஆ, ஆ, எல்லாம் விளங்கிவிட்டது. இனி ஒன்றுஞ் சொல்லவேண்டாம். அகப்பட்டுக்கொண்டாயா அநங்கா? ஹா, ஹா, ஹா" என்று அடங்காமகிழ்ச்சியுடன் சிறிது நேரஞ்சிரித்து விட்டுத் தம்பியைப் பார்த்து, "எல்லாம் நமது காட்டிலேயே மழைபெய்கிறது. பழம் நழுவி பாலில் விழுந்தது மாதிரி ஸர்வஜித் நாளைக்குச் சாவான். பிரபு அநங்கனும் நமது கையில் அகப்பட்டுக்கொண்டான். அவனைக்கொண்டே நமது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்."

"அதையே தான் நானுஞ்சொல்லுகிறேன் ஆயினும் நமது காரியத்தை எப்படி சாதித்துக்கொள்ளுகிற தென்பதை நாம் யோசிப்போம். நாம் ஒரு தூதனை அநங்கனிடம் விடுத்து பயமுறுத்தி அவனை நமது விருப்பத்திற்

கிசையும்படி செய்பலாம். எனக்கு வேறொரு யோசனையும் படுகிறது. இரத்தினம் சொல்லுவதிலிருந்து காரியஸ்தன் வரதன் அடிக்கடி இரவு காலங்களில் தனக்கே தெரியாமல் காட்டிலலைந்து திரிவதாகத் தெரிகிறது. இந்த வரதனும் நியாயஸ்தலத்தில் பொய் சொல்லியிருக்கிறான். இவன் பிரக்ஞையற்று அர்த்த இராத்திரியில் ஞாபகஸ்தம்பத்தண்டை அடிக்கடி காட்டுக் காவலர்களால் காணப்படுவதாகத் தெரிகிறது. இப்படி வரும்போது அவனை எப்படியாவது சிறைபிடித்து இங்கு கொண்டுவந்துவிட்டால் அவனைக் கொண்டே நமது ஏற்பாடுகளை முடித்துக்கொள்ளலாம்.''

“ஆ, ஆ, எனதருமைத் தம்பியே, உனது புத்தியே புத்தி. நீ இரண்டாவதாகச் சொன்ன யுக்திதான் திறமானது. ஆனால் நாம் இப்போது வெளியே நகரக் கூடாதவர்களாயிருக்கிறோமே. என்னசெய்வது?''

“அதற்காகத் தாங்கள் யோசிக்கவேண்டாம். நமது இரத்தினத்தை இக்காரியத்தில் ஏவிவிட்டால் யாதொரு குறையின்றி அதை முடித்துவிடுவான். அவனை நாம் கூப்பிடுவோம். அடே, யாரடா அங்கே?'' என்று கூப்பிட்டான்.

ஒரு சேவகன் வந்தான். இரத்தினத்தைக் கூட்டி வரும்படி சேவகன் ஏவப்பட, அவனும் பத்து நிமிஷங்களுக்குள் இரத்தினத்தைக் கூட்டிவந்து சகோதரர்கள் சமுகத்தில் விட்டுவிட்டு வெளியே அகன்று விட்டான்.

வந்தவனைப்பார்த்து கார்த்தவீரன், “என்ன, வேறு விசேஷங்களுண்டா? என்று கேட்டான்.

“ஆம், பிரபுக்களே ! நியாயாதிபதிகள் அமராபுரிக்குச்சென்று விட்டார்கள். சீமாட்டி லீலாவதி மனஞ்சகிக்காமல் கோட்டையை விட்டு இன்று காலமே சேஷியம்மாளோடுகூட ஜயகாந்தருடைய மாளிகைக்குச் சென்று விட்டாளாம். ஜயகாந்தருடைய புத்திரிகள் அவளுக்குக் கூடியமட்டும் தேறுதல்கள் சொல்லிக்கொண் டிருக்கிறார்களாம்.''

“சரி, அதெல்லாமிருக்கட்டும். இப்போது உன்னை ஒரு முக்கியமான அலுவலில் ஏவப்போகிறோம். இதில்தான் உனது முழு சாமர்த்தியமும் விளங்கவேண்டும்'' என்று கார்த்தவீரன் அவனைத் தட்டிக் கொடுத்து எந்த முக்கியமான காரியத்தைக் குறித்து இவ்விருவர்களும் பேசிக்கொண்டிருந்தார்களோ அதைக்குறித்து இரத்தினத்திடத்திலுஞ் சொல்ல, அவனும் தான் வஞ்சகமில்லாமல் தன்னாற் செய்யக்கூடிய பிரயத்தினங்கள் யாவற்றையுஞ் செய்து காரியத்தை முடிக்க சித்தமாயிருப்பதாகச் சொன்னான்.

பிறகு சிலநேரம்வரையில் நினைத்த காரியத்தை எப்படி நிறைவேற்றுவதென்பதைக்குறித்து யோசனை செய்து முடிவுக்கு வந்து, இரத்தினத்தையனுப்பிவிட்டு இரு சகோதரர்களும் இரவு போஜனத்திற் குட்கார்ந்தார்கள்.

34-வது அத்தியாயம்.

இப்போது நடுநிசி; அழகிய சந்திரனின் காந்தி காடு, கோட்டை, மலை, பூமி முதலிய பற்பல இடங்களில் பிரகாசித்துக்கொண்டிருந்தது. இதோ மரங்களில் இலைகளில்லாதகாலம்; ஆகையால், சந்திரகாந்தியால் காட்டிலுள்ள ஒத்தையடிப்பாதைகளெல்லாம் தெளிவாய்த் தெரிந்தன.

இப்படிப்பட்ட பாதைகளில் ஒன்றின் வழியாய் இரத்தினமும் மலையாட்களில் சிலரும் இந்நடுநிசியில் சாவகாசமாய் குதிரைமேலேறி சென்றுகொண்டிருந்தார்கள். அடிக்கடி தங்கிக்கொண்டு, உற்றுக்கேட்டுக்கொண்டிருந்தார்கள்; ஆனால் அவர்கள் எந்த சத்தத்தைக் கேட்க ஆவலாயிருந்தார்களோ அதை அவர்கள் கேட்கவில்லை. இப்படித் தங்குகிறதும் கேட்கிறதுமாய் மேலே சென்றுகொண்டேயிருந்தார்கள். கடைசியாய் இக்கதையில் அடிக்கடி குறிப்பிடப்பட்ட சலவைக்கல்லால் செய்யப்பட்ட ஞாபகஸ்தம்பத்தருகில் வந்து சேர்ந்தார்கள். இரத்தினம் குதிரையை விட்டிறங்கினான்; தன்னுடன் வந்த ஆட்களை மரங்களின் மத்தியில் சிறிது தூரத்தில் இருக்கச்செய்து, ஓசை செய்யாமல் ஞாபகஸ்தம்பஞ் சென்றான்; அங்கே ஒருவரும் இல்லை. அதை ஒரு முறை சுற்றிப்பார்த்துவிட்டு, தன்னாட்களிடம் திரும்பி வந்தான். மறுபடி குதிரையேறி மனிதர்களை வேறொரு திசையை நோக்கி இட்டுக்கொண்டு போனான்; சிறிது நேரத்திற்கெல்லாம் எங்கே தூக்குமரம் நாட்டப்பட்டு பூமியானது துப்புரவு செய்யப்பட்டிருந்ததோ அவ்விடம் வந்து சேர்ந்தார்கள்; இவர்கள் நின்ற ஐம்பது கஜங்களுக்கப்பால் தூக்குமரமானது அந்த நிலவு வெளிச்சத்தில் தலையை நீட்டிக்கொண்டு பயங்கரமாய் நின்றது. சிற்றாற்றின் கரையில் உயர்த்தப்பட்டிருந்த தூக்குமரத்தை சில நிமிஷங்கள் நின்று உற்றுப்பார்த்துவிட்டு மறுபடியும் ஞாபகஸ்தம்பத்தை நோக்கித் திரும்ப இருக்கையில், திடீரென்று ஒரு மனித உருவம் தூக்குமரத்தினருகில் நடமாடிக்கொண்டிருந்ததைக் கண்டார்கள். மலையாட்கள் அவ்வுருவத்தைக் கண்டவுடன் நடுங்கிப்போய்விட்டார்கள்; ஆனால் இரத்தினத்தின் மனதில் ஒரு எண்ணம் உதிக்கவே, அவன் மற்றவர்களைப் பார்த்து இரகசியமாய் "ஒருக்கால் நாம் யாரைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறோமோ அவனாய், இருக்கக்கூடும்" என்றான்.

மற்றவர்களும் அப்படித்தான் இருக்கவேண்டுமென்று சொல்லவே, இரத்தினம் குதிரையிலிருந்து இறங்கி, தன்னாட்களில் இருவரையும் அப்படியே செய்யச்சொல்லி தன்னை பின்பற்றிவரும்படி சொன்னான். பிறகு இம்மூவர்களும் சந்தடி செய்யாமல் பூமியில் ஊர்ந்துகொண்டே வெகு சீக்கிரமாக தூக்கு மரத்தை யடைந்தார்கள். நடமாடிக்கொண்டிருந்த உருவம் மனிதனதே என்று நிச்சயமாயிற்று. அம்மனிதன் அப்போது இவர்களை நோக்கி முதுகைத் திருப்பிக்கொண்டு மண்டிபோட்டுக் கொண்டிருந்தான். ஆனால் இரத்தினம் அம்மனிதனுடைய முகத்தின் ஒரு புறத்தைப் பார்த்து மண்டிபோட்டுக் கொண்டிருந்தவன் வரதன் தானென்பதை நிச்சயித்துக் கொண்டான். இனி அவன் தங்களிடமிருந்து தப்பியோடமுடியாதென்பதைக் கண்டு, இரத்தினம் வரதனைக் கூப்பிட்டான்.

பேச்சு மூர்ச்சைக்காணோம். மண்டி போட்டிருந்தவன் இவர்களுடைய சான்னித்யத்தை யறிந்துகொண்டதாகத் தெரியவேயில்லை. இரத்தினம் நேரே நின்று முகத்தைப்பார்த்தான்; வரதனுடைய சரீரம் விறைத்துப்போனது போல் அசைவற்றும், அவனது கண்கள் நிலைகுத்தின பார்வையோடு விழித்திருந்தன. இரத்தினம் திகிலடைந்து இது ஒரு பிரேதமோ அல்லது பிரேத லோகத்திலிருந்து வந்த பூதா பிசாசோவென்று நினைத்தான்.

முதலில் சிறிது பயந்தபோதிலும், இவன் தூக்கத்தில் நடமாடுகிறவனென்று கேட்டிருந்ததால், சடுதியில் பயந்தெளிந்து, காரியஸ்தனுடைய தோளில் கையைப்போட்டு பலமாய் அவனை உலுக்கிக்கொண்டே "விழித்துக்கொள்—எழுந்திரு—எங்களுடன் வா" என்று கத்தினான்.

ஒரு நிமிஷத்திற்குள் வரதன் தேகத்தில் ஒரு அதிர்ச்சி உண்டாயிற்று; இதுவரையில் மந்தமாயிருந்த கண்களில் ஒளிவீசத் துவங்கிற்று; அவனுக்கு முழுப்பிரக்ஞையும் வந்து, கண்களின் பார்வைகளை சுற்றிலும் பிரயோகிக்கையில், தான் தூக்குமரத்தினடியில் வந்திருந்ததைக் கண்டவுடன் ஹோவென்றலறிக் கொண்டெழுந்தான். சில நிமிஷங்கள் கற்சிலைபோல் பிரமித்து நின்றான்; பிறகு ஈட்டியைப்போல் கடுமையாயும் கூர்மையாயும் குத்துகிற உணர்ச்சிகள் ஒன்றன் பின்னொன்றாய் புயலடிக்கிற சமுத்திரத்திலுள்ள அலைகளைப்போல் இவனது ஹிருதயத்தைத் தாக்கவே, அவைகளின் வேகத்தைத் தாங்கமுடியாமல் காட்டுமிருகத்தைப்போல் ஒரு பெருங்கூச்சலிட்டுவிட்டு, ஐயோவென்று கைகளை தூக்கிக்கொண்டு அடுத்த விநாடியில் செத்துவிட்டவன்போல் கீழேவிழுந்தான்.

இதைக்கண்ட மூன்று மலையாட்களும் அடிக்கடி இரத்தப் பிரவாகங்களையும் கொலைகளையுங் கண்டிருந்தபோதிலும், மண்டையிலடிபட்டவர்கள் போல் நின்றார்கள். அவர்களுடைய அங்கங்கள் விறைத்துப்போயின; பயத்தால் மயிர் கூச்சலுண்டாயிற்று. ஒவ்வொரு மரத்தின் நிழலிலிருந்து ஆயிரம் பேய்களும் பிசாசுகளும் புறப்பட்டு விட்டதென்று பிராந்திகொண்டார்கள். ஆனால் இப்படி பிராந்தியை யடைந்தது சில நிமிஷங்களின் வேலைதான். "என்ன! நாம் வந்த காரியத்தை மறந்து நமது நிழலைக் கண்டே பயப்படுகிற சிலைகள்போல் நிற்கிறோமே" என்றான் ஒருவன்.

இதற்குமேல் கீழே கிடந்த கிழவனை தூக்கினார்கள். அவன் உண்மையில் சாகவில்லையென்று கண்டு, இரத்தினம் மூர்ச்சையிலிருந்த அவனை குதிரை மேலேற்றித் தாங்கிகொள்ள, மலைக்கோட்டைக்கு எது மகாகுறுக்கான பாதையோ அது வழியாக தங்கள் குதிரைகளைத்தட்டி விட்டுவிட்டார்கள். அவர்கள் மலைக்கோட்டையைச் சேர்ந்தபோது சுமார் இரண்டு மணியிருக்கலாம். இதற்குள்ளாக வரதன் மூர்ச்சை தெளிந்து தனது முழு மனோதைரியத்தையுமடைந்து, தன்னைத் தூக்கிக்கொண்டு வந்தவர்களைப் பார்த்து, இத்துராகிருத காரியத்தை நீங்கள் எப்படிச்செய்யலாம்? என்னை இங்கு இழுத்துக்கொண்டுவர உங்களுக்கென்ன பாத்தியம்? எனது எஜமானுடைய கோபாக்கினிக்குள்ளாவீர்களென்பதை மறந்தீர்களோ!" என்றான்.

இவ்விஷயத்தில் எங்கள் எஜமானர்களுடைய உத்திரவுப்படி நடக்கிறோம். ஆகையால் நீ வாயை மூடிக்கொண்டிருக்கவேண்டும். தவிரவும் எங்

கள் எஜமானர்கள் உனது அவமரியாதையான வார்த்தைகளைச் சிறிதும் பொறுக்கமாட்டார்கள்; ஆகையால் நிதானமாகவே பேசு." என்றான் இரத்தினம்.

வரதன் மேற்பேசவில்லை; அவனிருந்த இடத்தையும் நிலைமையையும் யோசித்து, மௌனஞ்சாதிப்பதே புத்தியென்றுணர்ந்தான்.

மலைக்கோட்டை சேர்ந்தவுடன் சகோதரர்கள் சமூகத்தையடைந்தார்கள். அவர்கள் இரத்தினத்தைப்பார்த்து, "இனி நீயும் உன்னாட்களும் இங்கு விட்டகலலாம். ஆனால், உங்கள் அலுவல்கள் ஒழிந்துவிட்டனவென்று தூங்கச்செல்லவேண்டாம். சேணங்கள போட்ட இரண்டு குதிரைகள் ஆயத்தமாயிருக்கட்டும்; மேலும் விரைந்துபோய் வீரனை இக்கோட்டைக் கிடங்குகளின் சாவிகளோடு வெளிபபுறத்தில் தயாராயிருக்கச்சொல்லு."

உத்திரவுகளை நிறைவேற்ற சித்தமாயிருக்கிறதாகச் சொல்லித் தலைகுனிந்துவிட்டு இரத்தினமும் மற்ற ஆட்களும் வெளியே போய்விட்டார்கள். அவர்கள் சென்றவுடன் குண்டகீலன் வரதனைப்பார்த்து, "நீ உட்காரலாம்; நீ இங்கு கொண்டுவரப்பட்டதின் நோக்கததைக்குறித்து ஒருக்கால் ஒன்றுந் தோன்றாமல் திகைக்கலாம். இவ்விஷயத்தில் எங்கள் தூக்கத்தைக் கெடுத்துக்கொண்டு உன்னைக் கார்க்கவைகக வேண்டுமென்ற எண்ணமில்லை. ஆகையால் ஒளிமறைவில்லாமல் நான் சொல்லுவது யாதெனில், நான் புஷ்யமித்திரரின் புத்திரியை விவாஹஞ் செய்துகொள்ளுவதில் உறுதியுள்ளவனாயிருக்கிறேன். எனது காரியத்தை யுத்தேசித்து உன்னை இங்கு பிடித்துவரச் செய்திருக்கிறேன்" என்றான்.

"நானா?" என்று மகா ஆச்சரியத்துடன் சொல்லுகிறான்:-"பிரபுக்களே நான் பிரபு அநங்கரின் ஊழியக்காரனென்பதையும், சீமாட்டி லீலாவதியை அவர் விவாகஞ் செய்துக் கொள்ளப்போகிறார் என்பதையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்களே. அப்படியிருக்க நான் எப்படி உங்களுக்கு உதவப்போகிறேன்" என்றான் வரதன்.

"நீ சொல்லுவது யாவையும் நாங்களறிந்தவர்கள்தான். ஆனால் உன்னுடைய வாக்கு பிரபு அநங்கரிடத்தில் செல்லககூடியது. நீ பிரபு அநங்கருக்கும் எங்களுக்கும மத்தியஸ்தயாயிருந்து நாங்கள் சொல்லுகிற காரியததை முடித்துத் தரவேண்டும். பிறகு பிரபு அநங்கர் எங்களுக்கும் பிரபு புஷ்ப மித்திரருக்கும் மத்தியஸ்தமாயிருந்து எங்கள் நோககத்தை நிறைவேற்றவேண்டும்" என்றான் குண்டகீலன்.

தங்களுடைய ஏற்பாடுகளை நிறைவேற்றக்கூடிய உபாயத்தைத் தேடிவிட்டார்களோவென்ற அச்சத்தோடும், தான் காதிற்கேட்ட வார்த்தைகளால் ஆச்சரியத்தையுமடைந்த வரதன் அவர்களைப்பார்த்து "தங்களுடைய கருத்தை இன்னும் தெளிவாய் வெளியிடவேண்டும்" என்று பிராத்தித்தான்.

"வரதனே, கேள்" என்று குண்டகீலன் சொல்லுகிறான்:—"சீமாட்டி லீலாவதியை என்னுடைய பத்தினியாக்கிக் கொள்ளவேண்டுமென்று உறுதி

செய்து கொண்டிருக்கிறேன் — இல்லை, சத்தியஞ் செய்துகொண்டிருக்கிறேன்; நாங்கள் சிமோட்டியைத் தூக்கிக்கொண்டுபோக செய்த எத்தனங்களிலிருந்தே நீ நாங்கள் அவ்விஷயத்தில் எவ்வளவு அவாக்கொண்டிருக்கிறோமென்பதை யறிவாய். ஆனால் இனி எங்களது காரியத்தை சாதித்துக்கொள்ள முரட்டுத்தனத்திற் பிரவேசிக்கமாட்டோம். ஏனெனில், இலகுவான உபாயங்கள் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றன. இப்பொழுது சற்று கவனிக்க வேண்டும். முந்தாநாள் விசாரணையில் நீயும் உனது சிறந்த எஜமானரும் நியாயாதிபதிகளுக்கு முன்பாக கர்ணகடோரமான பொய்களைச் சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் பொய் சொன்னீர்களென்பது உங்களுக்குத்தெரியும். இப்பொழுது நீங்கள் சொன்னவை யாவும் பொய்களென்பது நிரூபிக்கப்பட்டு விட்டால்,——"

"மஹா மகிமை தங்கிய வீரர்காள்" என்று மகா விநயத்துடன் வரதன் கெஞ்சிக்கொண்டே சொல்லுகிறான், "ஒப்பற்ற பிரபுக்களே, உண்மையில், எனது எஜமானர் ஏதோ சொன்னதற்காக அவரிடத்தில் விரோதம் பாராட்ட மாட்டீர்களென நம்புகிறேன். ஒரு சிங்கம் ஒரு புழுவை காலடியில் வைத்து நசுக்கவேணுமென்று எண்ணங்கொள்ளுமா?" அதைப்போல் நானிருக்கிறேன்.

"ஆமாம், சமயம் வாய்த்தால் கிழவியும் பாடுவாள் என்பதுபோல், தக்க சமயத்தில் நீயும் நயமாய்ப் பேசுவாய். உன்னுடைய கிரியாம்சங்களை விட உனது வார்த்தைகள் அழகுள்ளவைகளென்பதை நாங்களறிவோம். ஆனால் இனி வார்த்தைகளை வளர்க்க எனக்கு விருப்பமில்லை. நான் சொன்னதுபோல் நீங்கள் பொய் சொன்னதை நான் நிரூபிக்கக்கூடுமானால் என்ன விளையும்? ஸர்வஜித்தின் மரண தண்டனை நிறுத்தி வைக்கப்படும்—நியாயாதிபதிகள் அனந்தகிரிக்குத் திரும்பிவருவார்கள்—ஒரு புதிய விசாரணை நடக்கும். அவ்விசாரணையின் முடிவு எப்படியிருக்கும்? நீங்களிருவரும் காராக்கிருஹத்தில் ஆயுசுபரியந்தம் அடைக்கப்படுவீர்கள். அத்துடன் நிற்காது. ஏற்கனவே இராஜாங்கத்தார் அவர்களுக்கு விரோதியான பிரபு புஷ்பமித்திரரோடு உனது எஜமானர் கூடிக்குலாவிக்கொண்டிருக்கிறதற்காக எப்பொழுது நசுக்கலாமென்று சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பொய்சொன்ன குற்றத்தை பிரமாதமாகக்காட்டி உனது எஜமானருடைய சொத்துக்கள் யாவையும் இராஜாங்கத்தார் சேர்த்துக்கொண்டு விடலாம்."

இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த வரதனுக்கு ஒன்றுந்தோன்றவில்லை. திகிலடைந்த அவனுடைய மனதில் ஒன்றன் பின்னொன்றாய் எண்ணிக்கையற்ற பயங்களுதித்தன. எவருக்கு பலவருஷங்களாய் விசுவாசத்துடன் உழைத்து வந்தானோ அந்த எஜமானருக்கும் தனக்கும் மலைபோல தவிர்க்கமுடியாத ஆபத்துக்கள் வந்துவிட்டனவென்பதை யுணர்ந்து, தேகம் நடுங்கிக்கொண்டு நாக்குளறிக்கொண்டு, "மகா கனம்பொருந்திய நீங்கள் ஏழைக்கிழவனை எவ்வளவுதான் பயமுறுத்தலாமென்று பார்க்க எண்ணங்கொண்டிருக்கிறது போலிருக்கிறது. போகட்டும் நான் மதியழிந்த கிழவன்தானே! நீங்கள் இரங்காமல இருப்பீர்களா?" என்று சொன்னான்.

இதற்குள் கார்த்த வீரன் "நாம் வீண்வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருப்பதை விட, வரதனுக்கு பிரத்யக்ஷமாக அவன் எஜமான் பொய்சொன்னதை ருசுப்படுத்துவோம்" என்றான்.

"அதுவும் சரிதான்" என்று குண்டகிலன் வரதன் கையை இறுகப்பிடித்துக்கொண்டு அவனை அவ்விடத்திலிருந்து வெளியே கூட்டிச்சென்று, வெளியில் தயாராய் நின்றுகொண்டிருந்த விரனைப்பார்த்து, நீ முந்திப்போ, நீ போகவேண்டிய இடந்தெரியுமல்லவா?"

விரனோ பயந்தவன்போல் சற்றுத்தயங்கி நின்றான். இவன் தூக்கமிகுதியால் மந்தனாயிருக்கிறானென்று சந்தேகித்த சகோதரர்கள் அவனை முந்திச் செல்லும்படி உரத்துச்சொன்னார்கள். உடனே விரன் தடுமாறிக்கொண்டே "பிரபுக்களே—கைதி அங்கே இல்லை—கீழேயுள்ள கிடங்குகளொன்றில் இருக்கிறான்" என்றான்.

உடனே குண்டகிலன், "சரி அவ்வளவு தானே. நீ தக்க காரணத்தைக் கொண்டு தான் அவனை அப்புறப்படுத்தி யிருக்கவேண்டும்' அதனாலென்ன? மேலே செல்" எனவே, மறுபடியும் விரன் ஸ்வரத்தை யிழுத்துக்கொண்டு "இல்லை—அங்கே—வேறொரு——"

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கார்த்தவீரன் தமையனைப்பார்த்து "இந்தப்பயல் ஏதோ செய்துவிட்டான் போலிருக்கிறது. அதற்காகத் தான் இவ்வளவு தயக்கம். அடே பயலே" என்று விரனை கடுமையாய் பார்த்துக்கொண்டு "நடந்ததை ஒளிக்காமல் சொல்லிவிடு. இல்லையாயின் உனது சரீரத்தைக் கழுகுகளுக்கு இரையாக்குவேன்" என்றான்.

உடனே விரன் "நீங்கள் சில தினங்களுக்கு முன் இங்கே கூட்டிக் கொண்டு வந்த ஸ்திரீயானவள் நமது கைதியைத் தப்புவிக்க ஏற்பாடுகள் செய்தாள். அதற்காக அவ்விருவர்களையும் கிழக்கிடங்குகளில் அடைத்துவிட்டேன்" என்றான்.

இவ்வளவுதானே. நீ செய்ததெல்லாம் சரிதான். அவளிடத்தில் எனக்கும் நல்லபிப்பிராயம் கிடையாது. அவள் நமக்கு துரோகஞ்செய்ய எத்தனித்தாளென்பதைக் கேட்டு நான் ஆச்சரியப்படவில்லை. ஆகையால் இனிதயங்காமல் வழியைக்காட்டி முன்செல்" என்றான் குண்டகிலன்.

இதற்கப்புறம் விரன் தயங்கவில்லை. ஹிருதயத்திலிருந்த ஒரு பெரும் பாரம் நீங்கினவனாய் கையில் விளக்கையும் கொத்துச்சாவிகளையு மெடுத்துக் கொண்டு முன்செல்ல, இரு சகோதரர்களும் சொப்பனத்தில் நடக்கிறவன் போலுள்ள வரதனை யிழுத்துக்கொண்டு பின் சென்றார்கள். நெடுநேரம் பல மச்சுப்படிகளின் வழியாய் இறங்கி கடைசியாக ஒரு வாசற்படியண்டைவந்து சேர்ந்தார்கள். அதைத்திறந்தவுடன் குண்டகிலன விரன் கையிலிருந்து விளக்கை வாங்கிக்கொண்டு, வரதன் கையை இன்னும் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு ஒரு கிடங்கண்டை வருகையில், அக்கிடங்கி லடைப்பட்டிருந்த ஸ்திரீயைப்பார்த்து வரதன் பிரமித்து நின்றான்.

குண்டகிலன் வரதனைப்பார்த்து "இவளை உனக்குத்தெரியுமா" வென்று கேட்டான்.

இதைக்கேட்டுக்கொண்டிருந்த அந்த ஸ்திரீ, "அவன் என்னையறியான். நான் அவனையறிவேன். புயலடித்த இராத்திரி—காட்டுக்கு மத்தியில்—ஞாபக ஸ்தம்பத்தினருகில்—அவன் பெயரை அவன் காதில் ஓதினேன்——"

"இந்தப் பயித்தியக்காரியோடு நமக்கேன் வீண்வார்த்தை, இராத்திரியோ செல்லுகிறது; இம் மனிதனோ திரும்பி அனந்தகிரி சேரவேண்டும்——" என்று கார்த்தவீரன் சொல்ல, தமையன் "ஆமாம்" என்றுசொல்லிக்கொண்டே அடுத்த கிடங்குக்கு விரைந்து சென்று அதற்கு நேரே நின்று, அக்கிடங்கு முழுதும் வெளிச்சம் பரவும்படி விளக்கைப்பிடித்தான்.

அங்கே—அறைக்குள்—மார்பில் கட்டின கைகளோடு கம்பிகளின்மேல் சாய்ந்துகொண்டு—சடையாயிருந்த மயிரும், குழிந்த கண்களும், ஒட்டிப்போன கன்னங்களும், அடையாளந்தெரியாதபடி மாறிப்போன உருவத்தோடுங்கூடிய கைதி காணப்பட்டான்.

அத்திக்கற்ற கைதி வரதனைக்கண்டதும் கூச்சலிட்டுக்கொண்டு, "வரதா நீயா? என்னைக்காப்பாற்று" என்றான்.

"ஐயோ, அவனல்லவா, அவனல்லவா" என்று வரதன் திகைத்துக்கத்தினான்; உடனே மண்டையில் ஒரு செம்மட்டியால் அடிபட்டவன்போல் சில அடிகள் பின்னடைந்து, மரஞ்சாய்ந்தாற்போல் குண்டகிலன் பாதத்தில் மூர்ச்சித்து விழுந்தான்.

* * * * *
* * * * * *

அரைமணி நேரத்திற்கெல்லாம் வரதன் குதிரைமேலேற்றப்பட்டு அனந்தகிரி மாளிகையை நோக்கி இரத்தினத்தால் நடத்திக்கொண்டு போகப்பட்டான்; அப்பொழுது சந்திர கிரணங்களினுடைய சகாயத்தால் அக்கிழவனுடைய முகத்தைப் பார்க்குங்கால் அது வெளுத்திருந்த வெளுப்பையும், அது அடைந்திருந்த கோபத்தையும் எடுத்துரைக்க முடியாததாயிருந்தது. உண்மையில் இந்த இராத்திரியில் சிறிது நேரத்திற்குள் அவனுக்குப் பத்து வயதுகள் கூடச்சென்று விட்டனபோல் தோன்றிற்று.

இப்படி போய்க்கொண்டிருக்கையில், சாலை திரும்புகிற ஒரு மூலைவந்தார்கள். அங்கு வந்ததும் இரத்தினம் வரதனைப் பார்த்து, "ஸர்வஜித்தும் அவனுடைய இரு ஆட்களும் எங்களோடு சண்டைசெய்த இடம் இதுதான். அவ்வாட்களிலொருவனை அடித்து விழுக்காட்டினது என் கைதான்; மற்றவன் அடிபட்டு விழுந்ததையும் நான் பார்த்தேன். சண்டை முடிந்தவுடன் பிரேதங்களைப்புதரில் வீசியெறிந்துவிட்டோம்" என்றான்.

வரதன் பதிலொன்றுஞ் சொல்லவில்லை. மேலே இருவரும் மௌனஞ் சாதித்துக்கொண்டு சென்றார்கள். கடைசியாக அனந்தகிரியினருகில் வந்து சேர்ந்தார்கள் "இனி நான் இங்கேயே நிற்கிறேன். நீ மாளிகை போகலாம்.

என ஜெஜமானர்களுடைய வார்த்தையை நிறைவேற்றத் தவரக்கூடாது." என்றான் இரத்தினம்.

உடனே வரதன் குதிரையை விட்டிறங்கி இரத்தினத்திடமிருந்து விடைபெற்றுக்கொண்டு மாளிகைக்குத் தட்டுத் தடுமாறிக்கொண்டு விரைந்து சென்றான். இரத்தினமும் மலைக்கோட்டைக்குத் திரும்பினான்.

☞ ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர், பி-ஏ.

கமலாலயம்.

முன்தொடர்ச்சி.

சபை முன்னேயே கூடியாய் விட்டது. 9, 10, மாது சிரோன்மணிகள் வரிசையாய் உட்கார்ந்து இருக்கிறார்கள். சாவித்திரியம்மையும் இன்னொரு பெண்ணரசியும் பாடுகின்றனர். மற்றவரில் சிலர் தாம்பூலம் தரித்துக்கொள்ளுகின்றனர்; சிலர் படத்தின் அழகைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இரண்டொருவர் சுந்திர வடிவமுள்ள ஒரு குழந்தையோடு விளையாடுகின்றவர். ஞானம்பிகையும் சாவித்திரியம்மையும் நமக்குத் தெரியுமே; மற்றவர்கள் யார் என்று பார்ப்போம். ஞானம்பிகையின் பக்கத்தில் இருப்பது கமலாபாய். இவள் தகப்பனார் வெங்கோபராவ்; அவரைத் தெரியாதவர்களே தாராநகரில் கிடையாது. பல ஜில்லாக்களிலும் அவர் பெயர் நன்றாய்த் தெரியும். முதல் தரம் போலீஸ் இன்ஸ்பெக்டராய் இருந்து இப்பொழுது இரண்டு வருஷகாலமாய் பென்ஷன் வாங்கிக்கொண்டிருக்கிறார். 7, 8, வருஷங்களுக்கு முன் இவ்விடம் தாராநகரத்திலேயே உத்தியோகம் செய்துகொண்டிருந்தார். அச்சமயத்தில் நமது ஞானமும், கமலமும் ஒருங்கே பெண் பாடசாலையில் படித்தவர்கள். பாலிய சினேகிதர்கள் என்பது அவர்களுடைய ஒவ்வொரு காரியத்தாலும் தெரியவரும். கமலத்துக்கு வயது-18. ஆனால் மஹா சாது. நான்கு வார்த்தை ஒரே சமயத்தில் பேசுதல் அரிது. சபையில் இது வரையில் கமலாபாய் பேசினதேயில்லை.

அவளுக்கு வலப்புறம் உட்கார்ந்து இருப்பது லக்ஷ்மியம்மாள். அவள் மலர்ந்த முகமும், புன்சிரிப்பு வாய்ந்த உதடுகளும், அகன்ற கண்களும் அவளுடைய கபட மற்ற மனத்தை வெளியிடுகின்றன. வயது சுமார்-25 இருக்கலாம். ஸ்திரீகள் லக்ஷ்மி அம்மாளைப்போல் உயரமாய் வளர்வது அபூர்வம்; தேகமும் வயதுக்குச்சற்று பருமன் என்றேதான் சொல்லவேண்டும். 'கபடமின்றி வளர்ந்து இருக்கிறாள், நம்ம லக்ஷ்மி! என்பாள் சாவித்திரியம்மை. இவள் ஒரு உத்தியோகஸ்தருடைய மனைவி. தஞ்சாவூர் ஜில்லாவில் நன்னிலம் எனனும் கிராமத்தில் வசிக்கும் ஒரு செல்வப் பிரபுவின் மகள். படிப்

பும், யுக்தி புத்தியும் சற்று பட்டுத்தான். ஆயினும் தன் அருமைக் குழந்தைகளையும், சதா முணுமுணுத்துக் கொண்டிருக்கும் தன் புருஷனையும் திருப்தி செய்வதைவிடச் சிறந்த காரியம் உலகத்தில் வேறு ஒன்றும் இல்லையென்பது அவளுக்குப் பூரண நம்பிக்கை. 4, 5-குழந்தைகள் பெற்றவள். முன்னமேயே சுந்தரவடிவத்துடன் இருக்கும் ஒரு குழந்தையுடன் சிலர் விளையாடுவதாகச் சொல்லவில்லையா? அப்பையன் லக்ஷ்மியம்மாள் மகன்தான். பின்புறம் தவழ்ந்து செல்லும் 'கைக்குழந்தையும்' இவளுடைய பெண்ணே. வெளியே புறப்படுங்காலத்தில், ஒரு குழந்தையை இடுப்பில் ஏற்றிக்கொண்டும், மற்றொரு குழந்தையை கையைப் பிடித்து நடத்திக்கொண்டும், போகாவிட்டால் தன்னைப்போன்ற பெண்டிருக்கு மிகக் குறைவு என்று லக்ஷ்மியம்மாளுக்கு எண்ணம் போலும்! எப்படியிருப்பினும் இருக்கட்டும்; லக்ஷ்மி குழந்தைகளின் அழகைப் பார்த்து அக்குழந்தைகளை எடுத்து முத்தமிடாதவர்களே கிடையாது.

ருக்மணியம்மாள் லக்ஷ்மியம்மாள் பக்கத்தில் இருப்பது. இவள் ரெவனியூ இன்ஸ்பெக்டர் —— சாரியார் பத்னி. தனக்குத்தெரிந்த அளவு சபையில் ஒருவருக்கும் தெரியாது என்பது அவளுடைய எண்ணம். சபையில் நுழைந்தவுடனேயே எல்லாரும் தன்னுடன் பேசவேண்டும்; இல்லாவிட்டால் தன்னை அவமதித்ததாக எண்ணுவாள்; கோபம் அடக்கமுடியாமல் வந்துவிடும். ஆகையால் ஞானமும், சாவித்திரிதேவியும், ருக்மணியம்மாளை எப்பொழுதும் திருப்திசெய்யவே முயலுவார்கள். தங்கள் வீட்டிற்குவந்தவர்கள் கோபத்துடன் போவது என்றால் கமலாலயத்துக்கே அவமதிப்பு ஏற்பட்டதாக அவர்களுடைய எண்ணம்.

கடைசியில் நரைத்த தலையுடனும், ஒட்டிய கன்னங்களோடும், மடிப்பு விழுந்த நெற்றியோடும், ஓலை பாரத்தால் தொங்கும் காதுகளோடும், வற்றிய கழுத்துடனும் இருப்பது அகிலாண்ட நாயகியம்மை. வயது 50-க்குமேல் இருக்கும். எழுத்து வாசனை என்பதே தெரியாது. ஆகையால் மஹாமூடாத்மா என்று நீங்கள் எண்ணுதல் பிசகு. இயற்கை யறிவுமிகுந்தவள்; எல்லா ஆலோசனையும் நிரம்பியவள்; தற்காலத்தில் தலைகீழாய் விழும் அரைகுறைப் படிப்புள்ள சிறுமிகளுக்கு அகிலாண்ட நாயகி என்றால் மிகபயம்! என்றால் அவர்களைத் திட்டுவாளா? கேலி செய்வாளா? கோபிப்பாளா? இல்லை, இல்லை! தப்பிதம் செய்தவர்கள் இக்கிழவியின் அமர்ந்த வார்த்தைகளைக் கேட்டால் போதும். 'என் இப்படிச் செய்தோம்' என்று மயங்குவார்கள். இவ்வகை மேன்மை சிலரிடம் இருக்கவே இருக்கின்றது; பலரும் அநுபோகத்தில் பார்த்திருக்கலாம்.

பாக்கியிருப்பவர்களைப்பற்றி சமயம் கிடைத்தபோது பேசிக்கொள்வோம். ஒரு சபையில் இவ்விதமாய்ப் பல குணங்களுடையவர்கள் வந்து கூடுவது இயற்கைதானே; இயற்கையாய் உள்ளதை அப்படியே எடுத்துச்சொல்வது தான் என்போன்ற ம்பதைகளுக்குச் சுலபம். ஒருஸ்திரீ சரஸ்வதிபோல் கற்றவள் என்றும், மற்றவள் மைத்திரேயிபோன்று சாஸ்திர விசாரம் செய்தவள் என்றும் கற்பித்துக்கூற என்னால் முடியாது. அவரவர் குணங்களையும் சாமர்த்தியங்களை உள்ளபடியே சொல்லிவிடுகிறேன்.

இவர்கள் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் கமலாலயத்தில் சபை கூடுவது வழக்கம். கூடின சமயத்தில் வீண்பொழுது போக்குவதே கிடையாது. ஞானம்பாள் ஏதாவது படிப்பாள், அல்லது சாவித்திரி அம்மாள் ஏதாவது பாடுவாள். மற்றவர்களும் படிப்பதுண்டு. விஷயங்களை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்து விட்டு, அவைகளுக்கு சம்பந்தப்பட்ட வேறு விஷயங்களைப் பற்றியும் எல்லாரும் கலந்து பேசுவார்கள். இவ்விதமாய் நல்ல வழியில் காலம் போக்குவதினால் எல்லாருக்கும் பல நன்மைகள் ஏற்பட்டன என்பது நான் சொல்ல வேண்டுவதில்லை.

சில பெண்மணிகள் கமலாலயத்தில் அமைதியாய்க் கூட்டங்கூடி சத்காலக்ஷேபம் செய்து கொண்டிருப்பதைப்பற்றி நானேன் இவ்வளவு "தடபடல்" செய்யவேண்டுமென்று கேட்பீர்களோ? அதற்கும் காரணம் பிரேமநாதர் போடும் சாப்பாடுதான்! நன்றாய்ச் சாப்பிட்டுவிட்டு, திண்ணையில் உட்கார்ந்து தெருவில் போகும் ஜனங்களை கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டே எவ்வளவு நேரம் இருக்கக்கூடும்? அல்லியரசானி மாலை, நளவெண்பா, ராமாயணவசனம் முதலியவற்றை எவ்வளவு நேரம் தான் படிப்பது? வாயிற் காப்போன் திண்ணையில் படுத்துத் தூங்குவது என்றால் அடாதகாரியம். ஆகையால் கமலாலயத்தில் வாரம் வாரம் கூடும் மஹாசபையில் நடக்கும் விஷயத்தைப் பற்றியாவது எழுதலாம் என்று ஒரு எண்ணம் உண்டாயிற்று. பிரேமநாதர் மாதம்மாதம் கடைக்கணக்கு எழுதிவர என்னிடம் ஒரு புஸ்தகம் கொடுப்பதுண்டு. அதில் மிகுந்த பக்கங்களில் சபையில் நடக்கும் விஷயங்களைப் பற்றி எழுதிக்கொண்டே வந்தேன். பல புஸ்தகங்கள் முடிந்துவிட்டன. திருப்பிப் படித்துப் பார்த்ததில் பல இனிமையான கதைகளும் மெம்பர்களின் நடத்தை வெகு விநோதமாயும் இருந்ததுபற்றி படிக்கப் படிக்க சந்தோஷம் மேலிட்டது. என்னைப்போல் பலரும் இச்சரித்திரத்தை படித்துச் சந்தோஷப்படுவார்கள் என்றும்,—முக்கியமாய் மாதர்கள் படிப்பதற்கு மேன்மையான பல விஷயங்கள் இருப்பது பற்றியும்,—மாதர் மனோரஞ்சினியில் பதிப்பிக்கத் துணிந்தேன்.

பத்திராதிபரும் எனக்கு இடங்கொடுக்க சம்மதித்தது பற்றி சந்தோஷப் படுகின்றேன். ஞானம்பிகையும் மற்றவர்களும் தங்கள் சபையில் நடப்பது பத்திரிகை மூலமாய் வெளிப்படுகிறது என்றால், என்ன நினைப்பார்களோ என்னவோ!! அதை நான் இப்பொழுது யோஜிக்கப் போகிறதில்லை.

இப்பக்கங்களை படிப்பதினாலேயே என்னுடைய அறிவின்மை நன்கு புலப்படும். ஆகையால் நான் என்னுடைய உபயோகமற்ற தமிழ்ச் சொற்களை உங்கள் முன்னில் அதிகமாய்ப் பிரசங்கம் செய்யப்போகிறதில்லை. சபையில் நடந்தவற்றை அச்சபையின் மெம்பர்களையே பேசும்படி செய்துவிடுகிறேன். அதாவது அவர்களுடைய வார்த்தைகளை அப்படியே எழுதிவிடுகிறேன். ஞானம்பிகை, ருக்மணி அம்மாள், இவர்கள் பேசும் தமிழும் எழுதும் தமிழும் மிகச்சிறந்தது என்பதற்கு ஐயமில்லை. நானு அவர்களுக்குச் சிபார்சு செய்யவேண்டும்!! அவர்கள் பேச ஆரம்பித்தால் அவர்களின் சாமர்த்தியம் உங்களுக்கு நன்றாய்த்தெரியும்.

பத்திரிகையில் விஷயங்கள் வருவது என்றால் தலைப்பில் ஏதாவது எழுதவேண்டுமே? பலவாறு யோஜித்துக் கடைசியாய் இடத்தின் பெயரே இடத்தில் நிகழும் விஷயங்களையும் குறிக்கட்டுமென்று "கமலாலயம்" என்று பெயர் கொடுத்தேன். இனிக்கால தாமிதஞ்செய்யாமல் சபையில் நடந்தவற்றை ஜனவரிமாதப் பத்திரிகையில் வரும்படி அனுப்புகிறேன்.

வாயில் காப்போன்.

பன்னிரு இரவு.

(148-வது பக்கத்தொடர்ச்சி.)

இஃதிங்ஙனமிருக்க, ஒலீவியாவின் மாளிகையினின்றும் மனக்கலக்கங் கொண்டு செயலற்றுத் திகைத்துச்சென்ற வயோலாவை பின்தொடர்வோம். ஒலீவியாவை மணம்புரியக்கருதி ஓர் தனவந்தன் வெகுநாளாகத் தொடர்ந்து கொண்டிருந்தான். இவன் முழுமூடன். அவள் இவனது மூடத்தனத்தை நன்கறிந்து இவனை யொருபொருட்டாக மதித்தாளில்லை. பன்முறை மறுத்துரைத்த பின்னரும் இவன் தன் வழி செல்லாது அவளகப் புறத்தே யுறைந்து வந்தான். ஒலீவியாவால் ஆதரிக்கப்பட்டு அவள் வீட்டிலேயே வசித்துக் கொண்டிருந்த அவளது உறவினன் ஒருவன் மேற்கூறிய மடையனது புத்தியின்மையைச் செவ்வென வுணர்ந்து, அவனிடமுள்ள பணத்தையெல்லாம் பறிக்க வேண்டுமென்ற கருத்துடன், அவனிடம் நட்பு பாராட்டி, ஒலீவியா அரசனுக்கு எந்நாளும் மாலையிடாளென்றும், தற்காலம் அவன் மேல் சினங்கொண்டவள்போல் நடித்து வந்தாளாயினும் நாளடைவில் அவனையே மணம்புரிந்து கொள்வது திண்ணமென்றும் பலவிதமாக யேமாற்றித் தன்னுடனே யிருக்கும்படி போதித்தான். இந்த முட்டாளும் மற்றவன் செய்த வஞ்சனையை யறியாது, அவனையே குருவாகக் கொண்டு, அவன் சொன்னபடி யெல்லாஞ் செய்பவனாய், அவனது கையிலமர்ந்தவோர் சித்திரப்பதுமையாயினான். இவ்வாறிருக்கையில் வயோலா அரசனிடமிருந்து வந்து போகத் தலைப்பட்டாள். பின் முறை வந்தபொழுது ஒலீவியாவுடன் வெகு நேரந் தோட்டத்திற் பேசிக்கொண்டிருந்தாளல்லவா? அச்சம்பாஷணை முழுதுவதையும் இரு சிநேகிதரும் மறைந்து கேட்டுக் கொண்டிருந்தனர். ஒலீவியாவின் வார்த்தைகளொவ்வொன்றும் பெண் தேட வந்த பெருமானது செவியில் நாராசம் போல் பாய்ந்து, அவன் மனதில் குரோதமும், பொறாமையு முண்டாக்கிற்று. அதுகண்டு அவன் தோழன் அவனைச்சற்றுத் துயருறுத்தி வேடிக்கைப் பார்க்கத்தக்கச் சமயம் வாய்த்ததென்றெண்ணி, அவனை யழைத்து, சிசேரியோ (வயோலா)வை அரண்மனைக்குத் திரும்பிப் போகையில், வழிமறுத்துச் சண்டைக்கிழுத்து நோவாப் புடைத்தாலல்லது, வேறு வகையால் ஒலீவியாவின் பிரியத்தைச் சம்பாதிக்க வியலாதென்று கற்பித்தான். அம்முட்டாளும் அவ்வஞ்சகஸ்தனது வலைக்குட் சிக்கி அவனுபதேசத்திற் கிசைந்தான். அப்படியே யிவ்விருவரும் வீட்டுவாயில

ண்டை ஓர் செடி மறைவில் வயோலாவின் வரவை யெதிர் பார்த்துக்கொண்
டிருந்து, சற்று நேரத்திற்கெல்லாம் அவள் ஒலீவியாவிடம் விடை பெற்றுத்
திரும்பித் தெரு நோக்கிச் சென்றதைக் கண்டு, வெளியே போகும் வரை
காத்திருந்து, வீதியில் வந்ததும் அவளெதிரே சென்று உருவின கத்தியுடன்
சண்டைக்கழைத்தனர். அவர்களைக் கண்டதும் வயோலா நடுநடுங்கித் தான்
அவர்களுக்கு யாதொரு தீங்கும் விளைக்கவில்லையென்றும், ஆகையால் அவர்
கள் தன்னைப் போருக்கழைக்கக் காரணமில்லையென்றுஞ்சொல்லித் தயங்கு
வதைக்கண்டு, அவர்கள், ஓடுவோரைக்கண்டால் துறத்துவோர்க் கெளிதென்
றபடி, அண்டையிலணுகித் தாக்க முயன்றனர். அவள் அவர்களை யெ
திர்த்துச் சண்டை செய்யத் திறமையில்லாமையால் தன்னுயிர்க்கபாயம் நேரி
டுமோவென்னும் பயத்தினாலும், அல்லது உயிர்ச்சேதமின்றித் தப்பினாலும்,
தன் மாறு வேடம் வெளிப்பட்டு விடுமேயென்ற சிந்தையினாலும், மதிமயங்கி
நின்றாள். அச்சமயத்தில், திடீரென்று கம்பீரமான நடையையும் வீரத்த
ன்மை பொருந்திய தோற்றத்தையு முடைய வொரு வழிப்போக்கன் தன்னு
டைய வாளையுருவிய வண்ணமாயவர்கள் முன்னிலையிற்றோன்றி, வயோலாவி
னெதிர்களை நோக்கி, "இவ்வாலிபன் உங்களுக்கேதாவது அபராதஞ் செய்தி
ருப்பானாயின், அக்குற்றத்திற்கு நான் ஈடுறைப்பேன். அல்லது நீங்களே
யவனை வலிய வந்தெதிர்த்தீரானால், இக்கணமே நான் உங்களைத் தண்டிப்
பேன்" என்றுரைத்தான். இவனைகண்ட மாத்திரத்தில் அவ்விருவருந் தங்கத்
தியை யுறையிலிட்டு, ஓடியொளித்தனர். அவர்கள் மறையுமுன்னரே அரசன
து ஏவலாளரிருவராங் குதித்தனர். அவர்களுளொருவன் மற்றவனிடம் "இவன்
தான் அன்டோனியோ. நான் இவனை நன்கறிவேன். இப்பொழுது தனக்குரி
ய மாலுமியினுடையைத்தறித்திலனேனும், இவன் முகக்குறி மறக்கத்தக்கன
வல்ல. அரசன் கட்டளைப்படி சிறைப்படுத்துதி" என்றான். அங்ஙனமே
வயோலாவை ஆபத்தினின்றுங் காத்த வீரன் மறு நொடியில் ஓர் கைதியா
யினான். இவ்விந்தை யெல்லாங்கண்டு வயோலா பித்துப்பிடித்தவள் போல்
பிரமித்து நின்றாள். தன்னைக் காவலாளர் சிறைக்கூட்டத்திற்கிட்டுப் போகு
முன்னர், அன்டோனியோ வென்றழைக்கப் பட்ட அவ்வாண்மகன் வயோ
லாவை நோக்கி, வெகு நாளாய்ப் பழகினவன் போல், "நண்பா, நான் இப்
பொழுது எனக்கு நேர்ந்த துன்பத்திற்காகச் சிறிதும் விசனபட வில்லை.
உன்னை யிங்கே தனியே விட்டுப் போக நேரிட்டதே யென்பதற் காகவே
வருந்துகின்றேன். எனக்காக நீ துயருரேல். நான் உன்னிடத்திலொப்புவித்த
பணத்திற் சிறிது கொடுக்க வேண்டுகிறேன்" என்றான். இவ்வார்த்தைகள்
வயோலாவின் வியப்பைப் பதின் மடங்கதிகரித்தன. இவனது முகத்தை
முன்னர் யெப்பொழுதாவது பார்த்ததாக அவளுக்கு நினைப்பே யில்
லாத காலை, அவன் தன்னை நண்பனென்றழைத்ததும், தனனிடத்திற் பணங்
கொடுத்ததாகமொழிந்ததும், அவளுக்குப் பெரும் விந்தையாய்த் தோன்
றின. ஆயினும் ஆபத்துக்காலத்தில் வலிய வந்து தனக்குதவி புரிந்தவன் இப்
பொழுது துன்புற்றிருத் தலைக்காண மனமிரங்கி, "செய்யாமற் செய்த
வுதவிக்கு, வையகமும் வானகமு மாற்றலரிது" என்றதைக் கருத்திற்
கொண்டு, "ஐயா, நீர் என்னிடம் ஏதோ பணங் கொடுத்திருக்கிறதாகச்
சொல்லுகின்றீர். யான் அதை அறிகிலேன். ஆனால் இக்கணம் என்னிட
முள்ள சொற்பத் துகையை முழுமனதுடன் தங்களுக்குக் கொடுக்கின்
றேன். இதோ, பெற்றுக்கொள்மின்" என்றாள். இதைக்கேட்டதும் அன்டோ

னியோ திகைப்புண்டு, சற்றுநேரம் பிரமையடைந்தவன்போல் நின்று, பின் தெளிந்து, வருத்தத்துடனும், கோபத்துடனும் வயோலாவை நோக்கிப்பின் வருமாறுஎசினன். "அந்தோ! உனதெழில்பெற்ற மேனியைக்கண்டு மதிமயங்கி மோசம் போனேன். வெகுவாய் மானிடருள் அழகு வாய்ந்த உருவம், நன்றிகெட்ட, கயமைக்கோரறி குறியென்பதை யறிந்திருந்தும் மதிகெட்ட குருடனானேன். இளமைப் பருவத்திலேயே யிவ்வளவு வஞ்சகமும் துரெண்ணமுங் குடிகொண்ட வுன்மனது முதிர்ந்த பின்னெவ்வாறிருக்குமோ? உடலழகுண்மை யழகன்று. மனவழகே நிலைபெற்ற அழகாகும். "குஞ்சியழகுங் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சளழகு மழகல்ல மனத்தின்கண் மாசற்ற தூய்மையுடைத்தா யிருத்தலே பேரழகு. நெஞ்சத்துள் நல்லம் யாமென்னும் நடுவி நிலைமையாற் கல்வியழகே யழகு." நேற்றுதானே யுன்னை யெமன் கையினின்றும் விடுவித்தேன். மலைபோலெழும்பும் மலைகளைத் தாக்கவியலாது சோர்வடைந்து கடலுள் மூழ்குந் தருணத்திலுன்னை யென் கப்பலிலேற்றி யென்னுயிர்த் தோழனைப்போற் பாராட்டிவந்தேன். இப்பொழுதெனக்குத் துன்பம் நேர்ந்ததைக் கண்டதும் பல ஜென்மங்களா யொருவரை யொருவர் காணாதவர்போலப் பேசத்தொடங்குகின்றாய். "எந்நன்றி குன்றார்க்கு முய்வுண்டாமுய்வில்லை, செய்ந்நன்றி குன்றார்க்கு" என்று வள்ளுவனார் வரைந்துள்ளதையும் கருதினையில்லை. உன்னைத் தீயோனென்றெண்ணி யுன்னிடம் நான் நட்பு பாராட்டியது சாந்தகத்துண்டென்று செப்புதிறந்தொருவன் பாம்பகத்துக் கண்டதுடைத்து."

இம்மாதிரியாகத் தன்மேல் சாட்டப்பட்ட, கொடிய குற்றங்களொன்றையுந் தான் செய்யவில்லையென்று வயோலா நன்கறிந்தவளாகையால் தன்னை யிகழ்ந்தவன் பித்தனென்றெண்ணினள். ஆனாலவனது நடை பேச்சு செய்கைகளொன்று மவ்வபிப்பிராயத்திற் கிடங்கொடுக்வில்லை. மேலும் பித்தனயின் காவலாளர் அவனைச் சிறையிடக்காரணமில்லை. ஒருவேளை தன்னைப் போன்ற சாயலையுடைய வேறொருவனை மனத்திற்கொண்டு தன்னை யேசினனோ? அது சாத்தியமே. ஆனால் முழுதுந்தன்னை யுருவத்திலொத்தவன், தன் சகோதரனே யல்லாது வேறொருவ னிருக்கக்கூடுமோ? அன்றியுந் தான் மாறுவேடம் பூண்டபோது ஸெபாஸ்டியன் கப்பலில் எம்மாதிரியான உடையணிந்திருந்தானோ அதே மாதிரியான வுடையைத் தானுங்கொண்டா ளல்லவா? ஆயின்;— —. தன் சகோதரனுயிர் தப்பிப்பிழைத்து அந்நகரத்திலேயே யிருந்தாலுமிருக்கலாமோ? ஆ;— அன்டோனியோ தன்னைக் கடலினின்று மிறக்குந் தருணத்திற் காத்ததாகக் கூறினனே! ஆகையால் ஸெபாஸ்டியனுயிரோடிருப்பது நிச்சயம். அவனை யுயிர்காத்ததிவ் வன்டோனியோ வென்பதுந் திண்ணம். தன்னை ஸெபாஸ்டிய னென்றெண்ணியே மயங்கினனென்பதும் ஐயமின்று. தன் சகோதரனுயிரோடிருக்கின்றானென்னுஞ் சமாசாரத்தைக் கேட்கப் பெருமகிழ்ச்சிகொண்டாள். ஆனால் அவனிருப்பிடத்தையறிவதெங்ஙனம்? அன்டோனியோவோ சிறைக்கூடத்தி லமர்த்தப்பட்டான். முதலில் தன் சகோதரனுயிரையும், பின்னிரு முரடர்களால் தாக்கப்பட்டபொழுது தன்னுயிரையு முறையே காத்தவீரன் சிறைப்படுத்தப் பட்டதைக்கண்டு மிகவும் பரிதபித்தாள். ஆயினென்? அவனை விடுவிக்கும்படி தானரசனை வேண்டினால் அவன் தன் வேண்டுகோளுக் கிணங்காதிரான். இந்தத் தீர்மானத்துடன் வயோலா அரண்மனைக்கு விரைந்துசென்றாள்.

வயோலாவின் ஊகம் சரியானதே. மேற்கூறிய அன்டோனியோ முன்னரே நாம் சந்தித்த ஸெபாஸ்டியனது தோழனை கப்பற்றலைவனே. கடைசியாய் நாமவனைக் கண்டபொழுது தனது பணப்பையை ஸெபாஸ்டியனிடங் கொடுத்து அவனை நகர் சுற்றிப்பார்த்துவர வனுப்பித் தானொரு குறிப்பிட்ட சத்திரத்திற்குச் சென்றானல்லவா? வெகுநேர மங்குகாத்திருந்தும் ஸெபாஸ்டியன் வராததைக்கண்டு தான் முன் சந்தேகித்தபடி, அவன் வழிதப்பித்திரிகின்றானோ, அல்லது தீயோரிடையிற்றான் புகுகின்றானோ வென்ற யோசனையுடன், அவனைத் தேடிச்சென்றான். தன்னைக் காவலாளர் நகருட் கண்டாற் சிறையிடுவரென்பதை நன்கறிந் திருந்தபோதிலுந் தன் தோழனுயிரைத் தன்னுயிர்க்கு மேலாகப் பாராட்டிய யிந் நண்பர் திலகன் தனக்கு நேரிடக்கூடிய ஆபத்தையொரு பொருட்டாக மதியாது ஸெபாஸ்டியனைத் தெருவெங்குந் தேடிவருகையில், ஒலீவியாவின் மாளிகை யெதிரே வந்தான். அவ்விடத்தில் வழிப்பறியாளர் போற்றோன்றிய யிருவர்தன் நண்பன் மேற்பாய்ந் தெதிர்ப்பதைக்கண்டான். இவன் தன் தோழனென் றெண்ணியது நமது வயோலாவே.

அன்டோனியோ சத்திரத்தைவிட்ட கன்று வெகு தூரஞ்செல்வதற்கு முன் ஸெபாஸ்டியன் திரும்பிவந்து, அவன் தன்னைத்தேடிக்கொண்டு போயிருப்பதாகக் கேள்விப்பட்டுத் தானவனைத்தொடர்ந்துசென்றான். மேற்கூறிய வண்ணங்காவலாளருடன் அன்டோனியோ வயோலாவை விட்டகன்று சற்று நேரத்திற்கெல்லாம், ஸெபாஸ்டியன் ஒலீவியாவின் வீட்டெதிரே செல்லுகையில், முன் அன்டோனியோவைக் கண்டு பயந்தோடிய வயோலாவின் சத்துருக்களிருவரும் ஸெபாஸ்டியன் தனியே வருவதைக்கண்டு, அவனே வயோலாவென்றெண்ணி, யிம்முறை முன்போலத் தப்பவிடுவதில்லை யென்ற தீர்மானத்துடன், அவனை யெதிர்த்தனர். அவர்கள் தன்மேற் பாய்ந்ததும் ஸெபாஸ்டியன் தன் கத்தியையுருவி அவர்களிருவரையு மொருங்கே யெதிர்த்துப் புண்படுத்தி முறியடித்தான். அத்தருணத்தில் வீட்டிலிருந்து ஒலீவியாபரபரப்புடன் வெளிவந்து தன்னுறவினனையும் அவன் தோழனையுங் கடிந்து துறத்தி பின் ஸெபாஸ்டியன் பக்கத்திற்சென்று "ஸிஸேரியோ, இப்பொழுதென தகத்துறையுந் துஷ்டர்களிருவரும் உன்னைத் தொந்திரவுசெய்தது என தேவலினு லென்றெண்ணுதே. உன் முகத்திற் கோபக்குறிகள் தோன்றுகின்றன. நான் அவர்களைத் தக்கவாறு தண்டிக்கிறேன். நீ யென்னுடன் உள்ளே வா" என்றழைத்தனள். அவள் சொல்வதொன்றும் ஸெபாஸ்டியனுக்கு பொருள்படவில்லை. பேரழகுடைய பெண்ணொருவள் தன்னை முன்னே சிறிதேனுமறிந்திராத காலைத் தன்னுடனவ்வளவு நட்புடனும் நேசத்துடனும் பேசினதல்லாமல் தன்னையவள் வீட்டிற்கழைப்பதவனுக்கு ஆச்சிரியமாகவிருந்தது. "இதென்ன விந்தையாயிருக்கின்றதே! இப்பெண்மணியாரென்றும் இவளென்னையழைக்கக் காரணமென்ன வென்றும் நான் அறியக்கூடவில்லையே! இதென்ன கனவோ? உறங்குகையி லிவ்வளவு சந்தோஷகரமான கனக்காணுதலியலுமானல், நான் எப்பொழுதும் விழியாமலிருக்கப் பிரியப்படுகிறேன்" என்றெண்ணிக்கொண்டே நின்றான். அவன் தயங்கி நிற்பதைக் கண்டு, ஒலீவியா "நான் சொல்வதை மறுக்காதே, என்னுடன்கூடவா" என்று வருந்தியழைத்தாள். ஸெபாஸ்டியனுமுடன் பட்டுட்சென்றான்.

தன்னை வயோலா வென்றெண்ணி ஒலீவியா மயங்குகிறா ளென்னும் யோசனை ஸெபாஸ்டியனுக்கு உதிக்கவேயில்லை. ஆகையால் அவளது சொற்களின் பொருள் அவனுக்கு நன்கு விளங்கவில்லை யாயினும், அவளைக் கண்டகணமே யவளிடங்காதல் கொண்டான். ஒலீவியாவோ, இதுகாறுந்தன் பிரிய வசனங்களுக்குச் செவிகொடாது தன்னையவமதித்து வந்த விஸேரியோ, இன்று தன்னுடன் பிரியமாய்ப்பேசி, தன்னை மணம்புரிய தடை சொல்லா திணங்கியதைக் காணப் பெருமகிழ்ச்சிகொண்டாள். இருவரு முள்ளே சென்றதும், ஸெபாஸ்டியனுக்கு ஆசனமளித்து, அவனுடன் சிறிது நேரம் வார்த்தையாடிய பின், அவனெழுந்து வெளியே செல்லும்போது தானணிந்திருந்த முத்துமாலை யொன்றை யவனுக்குக் கொடுத்தாள். அப்பொழுது ஸெபாஸ்டியன தாச்சரியம் முன்னிலு மதிகமாயிற்றேனும் அதை மறுத்தாலவள் சிந்தை நோவாளோ வென்னுங் கருத்தினால், அம்மாலையை யேற்றுக் கொண்டான். வெளியே வந்ததும் பின் வருமாறு தனக்குள்ளே யோசிக்கலானான்:—

நான் கண்டதென்னகனவா? அல்லது நானறிவிழந்த பித்தனாயினேனா? இரண்டுமல்ல. இப்பூஞ்சோலை யிற்றானவளென்னைக் கண்டது. நறுமணம் பொருந்திய புஷ்பங்களினின்றும் வாசனையை யேற்று தென்றல் வீசுகின்றது. இன்று பூத்தமலர்களினின்றுஞ் சொரிகின்ற தேனைச்சேகரிக்கும் வண்டுகள் ரீங்காரஞ் செய்கின்றன. அழகிய பட்சிகள் இனியகுரலுடன் மதுரமாய்ப் பாடுகின்றன. அதோ களங்கமற்ற ஆகாயத்தின்கண்ணே தினகரனொளி வீசுகின்றான். இதோ அவள் கொடுத்த முத்து மாலை யென் கையிலிருக்கின்றது. ஆகையால் நான் வியப்புண்டு பிரமை யடைந்தாலும் பித்தனல்லன். அன்டோனியோ யெங்கிருப்பான்? நானவனைச் சத்திரத்திற் காணவில்லை. ஆனாலங்கு விசாரித்ததில் அவனங்கே யிருந்ததாகவும் என்னைத் தேடிக்கொண்டு வெளியே சென்றதாகவுங் கேள்விப்பட்டேன். அவனிப்பொழுது இங்கே யிருந்தாலெனக்குப் பேருதவியாயிருக்கும். மேன்மேலும் யோசிக்கையில் நானாவது, அச்சீமாட்டியாவது மதியிழந்திருக்க வேண்டு மென்று தோற்றுகின்றதே யல்லாமல், வேறு வகையாயொன்றும் விளங்கவில்லை. ஆனாலவள் தன வீட்டுக் காரியங்களை யெல்லாம் வெகு விமர்சையாய் நடத்தி வருகிறதைக் காணுகிறேன். இதேதோ பெருங் கண்கட்டிவித்தையா யிருக்கிறது.—இதோ வருகிறாளேயப்பொற்றொடி".

இச்சமயத்தில் ஒலீவியா அங்குவந்து "நானவசரப் படுவதற்காகச் சினங்கொள்ளற்க. உனதெண்ணங்கள் தூயவைகளாயிருப்பின், இப்பொழுது என்னுடனருகேயுள்ள கோயிலுக்கு வந்து, அங்கே கடவுள் முன்னிலையி லென்னை மணம் புரிந்துகொள். நானுனக்கு மாலையிட்டதை யிப்போழுதே வெளியிட வுனக்கிஷ்டமில்லையாயின் நீ குறிப்பிடுங் காலம்வரை யிரகசியமாயிருக்கட்டும்" என்றாள். ஸெபாஸ்டியனும் ஒலீவியாவிட மாழ்ந்த காதல் கொண்டுள்ளானாகையால் அவள் சொன்னதற் காவலுடனிசைய, அவ்விருவரும் கோயிலுக்குச் சென்று மணம் புரிந்தனர்.

இவ்விடஞ் சமாசாரங்களிவ்வண மிருக்க, ஆர்சினோ யினி ஒலீவியாவிடம் தூதனுப்புவதிற் பயனில்லையென்று கண்டு கடைசியாய்த் தானே நேரிற் சென்று வருவதாகத் தீர்மானித்து வயோலாவுடன் ஒலீவியாவின் மாளிகை

யினெதிரேவந்து அவளை யழைத்துவரும்படியேவினன். அப்பொழுது காவலாளரிருவரும் அன்டோனியோவை யரசன் முன் கொணர்ந்து நிறுத்தியவன் வரலாற்றை யுறைத்தனர். அரசனுமவனை நோக்கி "இந்நகருள் புகுந்தால் சிறைபிடப்படுவது திண்ணமென்றறிந்திருந்தும் பகற்காலத்தில் நீ வெளித்தோன்றியதென்ன மூடத்தைரியம்?" எனவினவினன்.

"அரசே ஓர்மாயை யென்னை யிங்கிழுத்துவந்தது. அதோ வுமது பக்கத்திலிருக்கும் நன்றிகெட்ட வாலிவனைக் கடலினின்றுந் தப்புவித்தது மல்லாமல், மூன்றுமாதகாலமாக வென் சகோதரன்போல் பாராட்டிவந்து, இன்று காலை யிரண்டு துஷ்டர்களால் வழி மறித்தெதிர்க்கப்பட்டபோது உதவிபுரிந்தேன். அவ்வாறிருக்க நான் சிறைப்படுத்தப் பட்டதைக் கண்டதும், தன்னையுமொருவேளைத் துன்புறுத்து வாரோவென்னும் பயத்தினால் நானவனிடங் கொடுத்திருந்த பணப்பையை யில்லையென்று மறுத்தது மன்றி, என்னையுமறியாதவன் போல் பாசாங்குசெய்திட்டான்"

அரசனவனைப் பித்தனென்றெண்ணி அப்புறமனுப்பித் திரும்பியபோது, ஒலிவியாவும் வயோலாவும் வாதாடிக் கொண்டிருப்பதைக் கண்டு சமாசாரமென்னவென்று விசாரிக்க, ஒலிவியா சிசேரியோவைத் தன் கணவனென்றழைப்பதையும், வயோலா தான் அவளைமணந்து கொள்ளவேயில்லையென்றுரைப்பதையுங் கேட்டான். அரசனுக்குக் கோபம் பொங்கியது. தன் பணிவிடைக்காரன் தான் காதலித்த பெண்ணை யவனே மணந்து கொண்டு தன் முன்னிலையி லொப்புக் கொள்வதற் கஞ்சி மறுக்கிறானென்று நினைத்து வயோலாவைக் கடிந்து யினித் தன் நாட்டிற்குள்ளிருக்க லாகாதென்று கட்டளையிட்டான். அச்சமயத்தில் ஸெபாஸ்டியனங்கு விரைந்து வந்து ஆங்கே நின்றுகொண்டிருந்த அன்டோனியோவைத் தழுவியணைத்து அவனைக் கண்டுகொண்ட களிப்பினா லானந்தக் கண்ணீர் பொழிந்தான். அவனைக் கண்டதும் அங்குள்ள யாவரும் திகைத்து நின்றனர். ஒரே காலத்தில், அன்டோனியோ இரண்டு தோழனையும், ஆர்சினோ இரண்டு சேவகனையும், ஒலிவியா இரண்டு கணவனையு முறையே கண்டனர். ஒவ்வொருவரும் அவ்வாறு மதிகலங்கி, நிற்கையில் ஸெபாஸ்டியன் தன்னைப் போலவே மற்றொருவனுமிருப்பதைக் கண்டு அம்மாயையை யறியவேண்டி வயலோவின் வரலாற்றை யுறைக்கக் கோரியதின்மேல் அவளுந் தன் சரித்திரத்தை முற்று முறைத்தாள். உடனே இருவரும் ஆனந்தக் கடலுள் மூழ்கினவரா யொருவரை யொருவர் கட்டியணைத்துக் களிப்படைந்தனர். ஆங்குள்ள மற்றவரு முண்மையை யுணர்ந்து சந்தேகந் தீர்ந்தனர். ஸிஸோரியோ பெண்ணென் றறிந்ததும் ஆர்சினோவுக்கவன் மேலுண்டான கோபமெல்லாம் பறந்து போயிற்று. இதுகாறு மவன் தன்னிடத்தில் நன்றியுடன் வேலை செய்துவந்ததை மெச்சினன். வயோலா பன்முறை தன்னை நேசிப்பதாகச் சொல்லிய சொற்களெல்லாம் ஆர்சினோவுக்கு நினைப்புவர ஆதிமுதலே யவள் தன்மேல் காதல்கொண்டிருக்கிறாளென்னு முண்மை விளங்கிற்று. அன்றையதினமே ஆர்சினோ வயலோவை மணம் புரிந்துகொண்டான். ஒரேதினத்திற் பிறந்து, ஒரே தினத்திற் கடலுள் விழ்ந்து கடவுளருளாலுயிர் பிழைத்த ஸெபாஸ்டியன், வயோலா யிருவரும் ஒரே தினத்தில் இல்லீரிய நாட்டின் முக்கிய பிரபுவின் மகளையும், அந்நாட்டரசனையு முறையே மணந்தனர். என்னே ஈசன் மகிமை!

முற்றிற்று. என். கலியாணசுந்திரம்.

சொஸ்தமாக்குவதைவிட
வியாதியைத் தடுப்பது நலம்

நல்ல தேகக்கட்டுள்ள ஒருமனிதன் பிளேக், அம்மை, காலரா, நுரையீரல் முதலிய வியாதிகளுக்குப் பயப்படவேண்டியதில்லை. வியாதி எப்பொழுதும் பலஹீனமுள்ளவர்களைப் பீடிக்கிறது. அவ்விதமுள்ளவர்களுடைய தளர்ந்த நரம்புகள் அதைத்தாங்குவதுகஷ்டம்

SCOTT'S EMULSION.

ஸ்காட்ஸ் எமல்ஷன் வியாதியைத்தடுத்து சரீரத்தில் தளர்ந்தநரம்புகளைப் பலமுள்ளவைகளாகவும், சதைகளைப்புஷ்டியுள்ளவைகளாகவும் செய்து வியாதி கிட்ட அண்டாமல் உனக்குச் சக்தியைக் கொடுக்கிறது.

மருந்து உட்கொண்ட பின் இதன் அனுபவம் தெரியும்,

கையினால் தொடப்படாமலே செய்யப்படுகிறது,

எல்லா ஔஷத சாலையிலும் விலைக்கு பெற்றுக்கொள்ளாம்.

ஸ்காட் அண்டு பௌன் கம்பெனி லிமிடெட்.

தயார் செய்கிற ரசாயன கர்த்தர், லண்டன் இங்கிலாந்து,